பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 14 வெள்ளிக்கிழமை (27.04.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 151

# புலிகளின் விமானங்கள் மீண்டும் வந்ததாகக் கிலி!

# கட்டுநாயக்கா, கொழும்புப் பகுதிகளில் பெரும் பதற்றம்!!

## ஒரு மணிநேரம் இருளடையச் செய்து விமான எதிர்ப்புப் பீரங்கிகள் முழங்கின

கொழும்பு,ஏப்.27

விடுதலைப் புலிகளின் விமானங்கள் மீண்டும் கட்டுநாயக்கா நோக்கி வந்துவிட்டதாகக் கிலி கொண்டு, விமானத் தளத்தில் இருந்து விமான எதிர்ப்புப் பீரங்கிகளும் ஷெல்களும் தொடர்ச்சியாக அரை மணிநேரத்துக்கும் அதிகமாக நேற்றிரவு முழங்கின.

கட்டுநாயக்காவை அண்டிய பகுதிகளான ஜா.எல, சீதுவ, வத்தளை, பேலியகொட மற்றும் நீர்கொழும்புப் பிரதேசங்களில் இடியோசை போன்ற பெரும் சத்தங்கள் கேட்டதால் அப் பகுதி மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர். என்ன நடக்கப் போகின்றதோ எனத் திகிலுற்றனர்.

விமான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக மின்சாரம் துண்டிக்கப்பட்டு தலைநகர் கொழும்பு உட்படப் பல பிரதேசங்கள் இருளடையச் செய்யப்பட்டன. அதனால் பல பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள், என்னவோ, ஏதோ என்று பதற்றமுற்றனர்.

நேற்றிரவு சுமார் 10.55 மணிக்குத் துண்டிக்கப்பட்ட மின்சாரம் மீண்டும் சுமார் 11.45 மணிக்கு கிடைத்த பின்னரே கட்டுநாயக்காவில் விமான எதிர்ப்புப் பீரங்கிகள் மற்றும் ஷெல்கள் முழங்கியதன் காரணம் மக்களுக்கு தெரியவந்தது.

ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை, கட்டுநாயக்க விமானத் தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம், இராணுவத் தலைமையகம் உட்பட பிரதான இடங்களில் உடனடியாக மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருளடையச் செய்யப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

புத்தளத்தைச் சேர்ந்தி பொதுமக்கள் சிலர் மூன்று விமானங்கள் வடக்கிலிருந்து தெற்குப் பக்கமாக கடலை முட்டிச் செல்வது போன்று பறப்பதைக் கண்டதாக விமானப் படையினருக்குத் தகவல் தெரிவித்தனர்.

அதனால் உண்டான சந்தேகத்தின் அடிப்படையில் அவசரத் தடுப்பு பணிகள் உடனடியாக முடுக்கிவிடப் (08 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில் ஹெலி வீழ்ந்து நொறுங்கியது

கொழும்பு, ஏப்.27

விமானப் படையினரின் எம்.ஐ.24 ரகக் ஹெலி ஒன்று நேற்று இரவு சுமார் 11.45 மணியளவில் வீழ்ந்து நொறுங்கி யது.

அந்தக் ஹெலியில் இருந்த இரு விமானிகள் உயிர் தப்பினர்.

விமானம் எங்கே வீழ்ந்தது, வீழ்ந்தமைக்கான காரணம் போன்ற விவ்ரங்கள் இச் செய்தி எழுதப்படும்போது கிடைக்கவில்லை. (அ-1)

### வடமராட்சியில் மீன் பிடிக்க நேற்று அனுமதியில்லை

உடுப்பிட்டி, ஏப்.27

வடமராட்சி கடற்பரப்பில் தொழில் செய்வதற்கு மீனவர்கள் நேற்று அனுமதிக்கப்படவில்லை.

கடந்த 19ஆம் திகதி தொடக்கம் கட்டுப்பாடுகளின் அடிப்படையில் தொழில் செய்ய மீனவருக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

நேற்றுத் தாம் தொழிலுக்கு செல்வதற்கு படையினர் அனுமதிக்கவில்லை என்ற மீனவர்கள் தெரிவித்தனர். (1-155-115)

## விமானப் படையினர் தற்காப்புத் தாக்குதல்!

கொழும்பு, ஏப்.27

கட்டுநாயக்கா விமானத் தளத்தை அண்டிய வான் பிரதேசத்தில் சந்தேகத்துக்கு இடமான விமானம் ஒன்று அவதானிக்கப்பட்டதைத் தொடர்ந்து விமானப் படையினர் விமான எதிர்ப்பு தாக்குதலை நடத்தினர் -

இரவு 10.45 மணியளவில் சந்தேகத்துக்கு இடமான விமானம் ராடரில் அவதானிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்தே வான் பிரதேசத்தில் தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது-

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சு (08 ஆம் பக்கம் பார்க்க)

### மதகுரு ஜிம்பிறவுண், உதவியாளர் மரபணுச் சோதனைகள் ஒரே நேரத்தில்

உதவியாளரின் தாயாரின் இரத்த மாதிரியும் சேகரிப்பு

கொழும்பு,ஏப்.27

புங்குடுதீவில் கரை ஒதுங்கிய சடலத்தை மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக, மதகுரு ஜிம் பிறவுனுடன் கூடச்சென்ற உதவியாளரான விமலதாஸின் தாயாரின் இரத்த மாதிரியும் சேகரிக்கப்பட்டுள்ளது.

யாழ்.ஆஸ்பத்திரியில் வைத்து இந்த இரத்த மாதிரி எடுக்கப்பட்டது.

றாகம வைத்தியசாலையில் இடம்பெறவுள்ள மரபணு பரிசோதனையின் போது மதகுரு ஜிம் பிறவுண், உதவியாளர் விமலதாஸ் ஆகியோரின் உறவினர்களின் இரத்த மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்று குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவில் இருந்து கொழும்பு வந்துள்ள ஜிம் பிறவுனின் பெற்றோரின் இரத்த மாதிரி ஏற்கனவே சேகரிக்கப்பட்டது தெரிந்ததே. (அ-1)

### கிளிநொச்சி மீது குண்டுவீச்சு இருவர் காயம்! மக்கள் பதற்றம்!!

புலிகளின் தலைவர்களே இலக்கு என்கிறது விமானப்படை

கிளிநொச்சி, ஏப்.27

இலங்கை விமானப்படையின் 'மிக்' விமானங்கள் நேற்றுக் காலை 7 மணியளவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிர்வாகப் பிரதேசமான கிளிநொச்சியில் குண்டுத் தாக்குதல் நடத்தியிருக்கின்றன.

கிளிநொச்சி நகருக்கு இரண்டு (08 ஆம் பக்கம் பார்க்க)

### நான் விடுதலைப் புலிகளை ஆதரிப்பவன் அல்லன்

சட்டப் பேரவையில் கருணாநிதி

சென்னை,ஏப்.27

நான் விடுதலைப் புலிகளை ஆதரிப்பவன் அல்லன். அவர்களுக்கு தமிழகத்தில் இடமில்லை.

தமிழக முதல்வர் மு.கருணாநிதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை சட்டப் (08 ஆம் பக்கம் பார்க்க)

### கோத்தபாயவுக்கு ஆதரவாக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஏப்.27

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவர்களது சகோதரர்களை பாதுகாக்க வேண்டும் என்று கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

பாதுகாப்பு அமைச்சர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்களைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட தொழில் அமைச்சர் மேர்வின் சில்வா,

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸாரின் அதிகாரங்களை படையினருக்கு வழங்குவதால் இராணுவ முகாம்கள் சித்திரவதைக் கூடங்களாக மாறும் அபாயம்!

ஆசிய மனித உரிமை ஆணைக்குழு எச்சரிக்கிறது

கொழும்பு, ஏப். 27

பொலிஸாரின் சட்ட அதிகாரங்களை இராணுவத்தினருக்கும் வழங்கி ஜனாதிபதி அண்மையில் விடுத்த பிரகடனம், மீண்டும் 1980களில் இடம்பெற்றது போன்று படைமுகாம்களை சித்திரவதைக் கூடங்களாக்கப் போகிறது.

இவ்வாறு எச்சரித்திருக்கிறது ஆசிய மனித உரிமை ஆணைக்குழு.

மேற்படி சட்ட நடைமுறைப்படுத்தல் இலங்கை மிகுந்த நெருக்கடிக்கும் இடருக்கும் உள்ளாகிவரும் இச்சமயத்தில், இத்தகைய அதிகாரங்களை படையினருக்கும் வழங்கும் பின்னணியில், இவற்றால் பாதிக்கப்படுவோர் சட்டரீதியாக நிவாரணம் பெறுவது மேலும் சாத்தியமற்றதாகிவிடும்.

2006ஆம் ஆண்டு ஜூலை 6ஆம் திகதி விடுக்கப்பட்ட அதே உத்தரவு மீண்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அப்போது வழங்கப்பட்ட அந்தச் சுற்றறிக்கை உத்தரவு ஆள்கடத்தல் மற்றும் ஆள்கள் காணாமற்போதல் போன்ற பிரச்சினைகள் அதிகரிப்பதை அப்போது தடுக்கவில்லை.

அதனால் அந்த பணிப்புரை சட்ட வலிமை அற்றது என்பது தெளிவு.

இத்தகைய பணிப்புரையானது, அவசர காலச் சட்டத்தின் கீழ் கைது செய்தல் மற்றும் தடுத்து வைத்தல் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள கடுமையான, விசாலமான,

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைக் குண்டுகள் மண்டபம் கடலில் மீட்பு!

அகதிகள் அதிர்ச்சி; பொலிஸார் குழப்பம்

மண்டபம், ஏப்.27

தற்கொலைக் குண்டுதாரிகள் பயன்படுத்தும் வெடிகுண்டுகளை மண்டபம் கடற்பகுதியில் வைத்துப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

5 வெடிகுண்டுகள் அடங்கிய பெட்டியொன்றை புதன்கிழமை அதிகாலை மீட்டிருக்கும் மண்டபம் பொலிஸார் இந்தச் சம்பவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பிருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

குறித்த வெடிகுண்டுகள் அடங்கிய பெட்டி றெஜிபோமில் பொதி செய்யப்பட்டிருந்ததாக அதனை மீட்ட வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் நிபுணர்கள் ஊட

(08 ஆம் பக்கம் பார்க்க)

### உலகக் கிரிக்கெட் போட்டி இறுதி ஆட்டம் பார்க்க ஜனாதிபதி மேற்கிந்தியத்தீவுக்குப் புறப்பட்டார்

கொழும்பு, ஏப்.27

உலகக் கிண்ணக் கிரிக்கெட் இறுதிப் போட்டியைக் கண்டுகளிக்கவென ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக்காலை பார்படோஸ் புறப்பட்டுச் சென்றார் என்று ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்தது.

ஜனாதிபதி லண்டன் வழியாக பார்படோஸ் செல்வார். இறுதிப் போட்டியில் இலங்கையும் ஆஸ்திரேலியாவும் மோதவுள்ளன. இலங்கையிலிருந்து மேலும் பல அமைச்சர்கள், இலங்கை - ஆஸ்திரேலிய இறுதிப் போட்டியைக்காண இன்று பார்படோஸ் புறப்பட்டுச்செல்வரெனத் தெரிவிக் கப்படுகிறது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இலங்கை வங்கியின் நடமாடும் கருமபீடம் வல்வை அம்மன் கோவிலில்

இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளையின் நடமாடும் கருமபீடம் எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் வல்வெட்டித்துறையில் இயங்கவுள்ளது. வல்வை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு இந்த விசேட கருமபீடம் இயங்கும்.

'சகலருக்கும் பரிசு' என்ற அதிர்ஷ்ட சேமிப்புச் சான்றிதழ் வழங்கும் சேவையும் இந்தக் கருமபீடத்தில் இடம்பெறும்.

முதலாம் திகதி வல்வை முத்துமாரி அம்மன் கோயிலடியிலும் இரண்டாம் திகதி நெடியகாடு கணபதி படிப்பகத்திலும் நடமாடும் கருமபீடம் செயற்படவுள்ளது. (203)

## பணி நயப்பு வாழ்த்து



திருமதி நந்தினி ஜெயகுமார்

எமது கல்லூரி மனைப்பொருளியல் ஆசிரியை

**திருமதி நந்தினி ஜெயகுமார்**

அவர்கள் நாளை (28.04.2007) சனிக்கிழமை தனது சேவையிலிருந்து ஓய்வுபெறுவதையிட்டு அவர்களது சேவையைப் பாராட்டுவதோடு அவர்கள் நல்வாழ்வு வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

(60104) ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/ வட்டு. மத்திய கல்லூரி.



## யாழ். மண்ணில் புதுப் பொலிவுடன்

மிகவும் சுவையான, சுகாதாரமான முறையில் இந்திய சைனீஸ் உணவு வகைகளை உண்டு களிப்பதற்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**கொசி உணவகம்**

- ★ முற்று முழுதாக குளிரூட்டப்பட்டது
- ★ Menu price இல் பெற்றுக் கொள்ளலாம்
- ★ மாநகர சபை எல்லைக்குள் விநியோகம் இலவசம்
- ★ விசேஷ வைபவங்களுக்கு விலைக்கழிவு வழங்கப்படும்

15, சிறாம்பியடி லேன்
ஸ்ரான்லி றோட். 222 5899

(60103)


## கால்சன் முன்பள்ளி விளையாட்டு விழா, கரந்தன் - நீர்வேலி

கால்சன் முன் பள்ளியின் 2007ஆம் ஆண்டின் வருடாந்த ஒன்றுகூடலும் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும்

காலம் : நாளை (28.04.2007) சனிக்கிழமை
இடம் : சனசமூக நிலையம் அருகில் நேரம் : பிற்பகல் ஒரு மணி.

மேற்படி வருடாந்த ஒன்றுகூடல் நிலையத்தின் தலைவர் த.சுபராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில்

பிரதம விருந்தினர் : போதகர் பென்ஜமின், மா.தவராஜா (சீயோன் தேவாலயம், மயிலங்காடு)

சிறப்பு விருந்தினர் : பி.மகேந்திரம் (நீர்வேலி மேற்கு J/270, கிராம சேவையாளர்)

சி.ஹரிந்திரன் (மாவை வைரவர் தேவஸ்தான தலைவர்)

ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

எனவே இச் சிறார்களின் கலை நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாக உறுப்பினர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும்.

அனுசரணை : **டான் கால்சன், அமெரிக்கா.**



## A/L 2009 கலை, வர்த்தகம்

இதுவரை அனுமதி பெறாத மாணவர்களுக்கு மீண்டும் ஒரு புதிய பிரிவு
நாளை ஆரம்பம் - சனிக்கிழமை

பிரபலம் பெற்ற மூன்று நிறுவனங்களில்

| 2009 | பொருளியற் கல்லூரி | | BARATHY |
|---|---|---|---|
| | [illegible] | இணுவில் | சித்தன்கேணி |
| பொருளியல் | சுதா[illegible] | -தாகரன் | சுதாகரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக் கல்வி | முரளி | முரளி | பசில் |
| தமிழ் | மீரா | பாலா | பாலா |
| அளவையியல் | R.P.சர்மா | ஜெபசுரேஸ் | R.P.சர்மா |
| இந்து நாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் | சுரேஸ் |
| புவியியல் | குமரன் | குமரன் | குமரன் |
| அரசியல் | றஜீவன் | சுகாஷ் | சுகாஷ் |
| இந்துசமயம் | தரன் | தரன் | தரன் |
| நாட.அரங்கியல் | கணேஷ் | கணேஷ் | சுதன் |
| வரலாறு | சுதன் | சுதன் | சுதன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் | வசந்தன் |
| மனைப் பொருளியல் | மேரி நீத்தா | மேரி நீத்தா | பிரபல ஆசிரியர் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

**பொருளியற் கல்லூரியில்**
யாழ்ப்பாணம், இணுவில் இரு இடங்களிலும் சனி - ஞாயிறு வகுப்புக்கள் மட்டும்.
**BARATHY** - சித்தன்கேணியில் வழமை போல்.

(59944)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரிய சகோதரத்துவ உறுப்பினரும் எமது உப அதிபருமான க.லோகநாதன் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி**
**வாலாம்பிகை கனகசபை**

அவர்கள் 24.04.2007 அன்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் பழைய மாணவியும் நீண்டகாலமாகச் சேவையாற்றிய ஆசிரியையுமான

**திருமதி**
**உமாதேவி நடராஜா**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டி எமது கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

யா/இராமநாதன் கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

### தங்கராசா ரமணன்

வதிரி, தங்கநிலாவைப் பிறப்பிடமாகக் கொண்ட தங்கராசா ரமணன் 26.04.2007 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கராசா - தர்மதேவி தம்பதியரின் மூத்த புதல்வனும் லக்ஸ்மன் (மதுவரித் திணைக்களம்), விமலன்(பலாலி ஆசிரிய கலாசாலை), திருமதி ஜெயசீலன் ரம்மியா, லக்ஸ்மியா, விமல்யா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (27.04.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தங்கநிலா, சு.தங்கராசா,
வதிரி. (ஓய்வுபெற்ற ஆசிரியர்).



## THE ROYAL COLLEGE OF JAFFNA

கலடமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப்பயில.
BY ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி Dip. in English and Science (London) 426, (302) கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை.
THE ROYAL IS THE BEST

## ரெலிபோன் விற்பனைக்கு

2 ரெலிபோன்
(RL - 021 222 5940)
(RL - 021 222 5732)
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : -
ந.சற்குணம்
திருப்பதி
தொமினிகேசன்,
சங்குவேலி.
(நேரில் வருதல் விரும்பத்தக்கது)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**பொன்னன் கணபதி**

தோற்றம் 17.01.1927 மறைவு 28.03.2007

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (27.04.2007) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நொத்தாரிஸ் தோட்டம்,
கரணவாய் மேற்கு, கரவெட்டி. (59896) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### பத்மநாதன் பத்மரூபன்



இணுவில் கிழக்கு வங்கியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் பத்மரூபன் 24. 04. 2007 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் - சிவமணிதேவியின் அன்பு மகனும் பத்மலிங்கம் (கனடா), பத்மலோஜினி(கனடா), பத்மரூபி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலாதேவியின் பெறாமகனும் ஆவார். அன்னாரது பூதவுடல் நேற்று (26.04.2007) வியாழக்கிழமை கொழும்பு பொறளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
வங்கியடி, உ.சதீஸ்குமார் (தம்பி).
இணுவில் கிழக்கு. (59943) 0779913761, 0214591213.

### செல்வி தயாபரம்பிள்ளை இராஜேஸ்வரி

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி.இராஜேஸ்வரி 25.04.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா தயாபரம்பிள்ளை - மற்றும் யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும் கௌரி (உதவி, அதிபர், யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), அமிர்த கௌரி (ஜேர்மனி), சுரேஸ்குமார் (டென்மார்க்), சிவகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச்சகோதரியும் சுந்தரலிங்கம், ரவீந்திரலிங்கம், திருமதி சாந்தி, திருமதி சிவமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.04.2007) வியாழக் கிழமை பி.ப. 3மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் :
ஈச்சமோட்டை வீதி,
சுண்டுக்குளி. (60101) செ.சுந்தரலிங்கம் (மருமகன்).

### திருமதி இராஜரெட்ணம் விஜயலட்சுமி



வண்ணார்பண்ணை, அரசடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜரெட்ணம் விஜயலட்சுமி நேற்று (26.04.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - சரஸ்வதி தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற இராஜரெட்ணத்தின் அன்பு மனைவியும் இரேணுகாவின் அன்புத் தாயும் ஜெயலட்சுமி, இராஜலட்சுமி, பராசக்தி, செல்வராஜா ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2007) வெள்ளிக்கிழமை மு.ப.11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

22, அரசடி ஒழுங்கை, தகவல் : இரேணுகா (மகள்),
தட்டாதெரு, செல்வராஜா (தம்பி),
யாழ்ப்பாணம். (60105) (சோபிகா ஜுவெல்லறி).

### திருமதி சிவசம்பு அன்னரத்தினம்



சங்கானையைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு செல்வநாயகம் வீதியை வசிப்பிடமாகவும், தற்போது தெஹிவளையில் வசித்தவருமான திருமதி சிவசம்பு அன்னரத்தினம் 24.04.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற சிவசம்புவின் அன்பு மனைவியும் திலகவதி (சுவிஸ்), திலகதாஸ் (பிரான்ஸ்), திலகநாதன் (பிரான்ஸ்), லோகேஸ்வரி (கொழும்பு), நகுலினி (கனடா), சிவகுமார் (கனடா), ரமேஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் ரபேந்திரன், கௌரி, தேவகி, ரவீந்திரகுமார் (H.N.B. Colombo), சந்தியநாதன், ஹம்சத்வனி, சிவாஜினி ஆகியோரின் அன்பு மாமியும் அனுஷா, ரொபின், சுஜீபன், புவனா, சயந்தன், சர்மிளா, ஷாமினி, அருண், சிந்துஜா, சுஜீபன், நிஷாந்தன், நிருஷா, வேணுஷா, சர்மதா, குஷலா, ஷிவாந்தினி, அஜந்தி, சுவீன், சுவேதிகா ஆகியோரின் அன்புப் பாட்டியும் றொஷான், ஆபேஸ், சுஜீனா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 27.04.2007 வெள்ளிக்கிழமை No.591, Galle Road, Mt.Lavinia இல் அமைந்துள்ள மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No. 44, Malwatha Road, Dehiwela. தகவல்:
T.P: 0602171591, 0773650816 (ச-50094) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







நேற்று நடைபெற்ற தந்தை செல்வாவின் நினைவுதின நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. தந்தை செல்வாவின் நினைவுத் தூபியை முதலாவது படத்திலும் மும்மதத் தலைவர்களும் இணைந்து சர்வமதப் பிரார்த்தனையில் ஈடுபடுவதை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள் : நேசன்.)

# தந்தை செல்வாவின் நினைவு தினம் உணர்வுபூர்வமாக நேற்று அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.27

தந்தை செல்வாவின் 30 ஆவது நினைவு தின நிகழ்வுகள் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தந்தை செல்வா அறங்காவலர் குழு உறுப்பினரும் தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவருமான பொ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தந்தை செல்வாவின் நினைவுச் சிலைக்கு தலைவர் பொ. கனகசபாபதியும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து இஸ்லாம் மதத் தலைவர் மௌலவி ஏ.ஜி.முகமட் இர்பான், இந்து மதத் தலைவரான நல்லைக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கிறிஸ்தவ மதத் தலைவரான வண.பிதா ஆர். ரவிச்சந்திரன் ஆகியோர் இணைந்து சர்வமத பிரார்த்தனையை நடத்தினர்.

அதனைத் தொடர்ந்து பேராசிரியர் எஸ். சத்தியசீலன், எம்.குலநாயகம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (202-68)

## மணிமண்டபத்தில் பயிற்சிக் கருத்தரங்கு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் முற்பகல் 10.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் 'மனிதனின் ஆளுமை விருத்தியில் தியானத்தின் பங்கு' என்னும் தலைப்பில் பயிற்சிக் கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலை உளவளத் துணையாளர் நா.நவராஜ் கருத்துரை வழங்கிவருகின்றார். (203-79)

# ஆபத்தான நோயாளரை எடுத்துச்செல்ல மட்டும் இரவு அம்புலன்ஸ் சேவையைப் பயன்படுத்துங்கள்

## சுகாதாரப் பணிப்பாளர் மக்களுக்கு அறிவுறுத்து

குருநகர்,ஏப்.27

யாழ்.நகரில் நடத்தப்பட்டுவரும் இரவு நேர அம்புலன்ஸ் சேவையைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர், நோயின் ஆபத்தான தன்மையைக் கருத்திற்கொண்டு அவசர தேவைகளுக்கு மட்டுமே அம்புலன்ஸ் அழைப்பை பெற்றுக்கொள்ளுமாறு யாழ். பிரதிமாகாண சுகாதார சேவைப் பதில் பணிப்பாளர் வைத்தியகலாநிதி கே.ரி.சிவபாதம் அறிவுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது-

அவசர தேவை, உயிர்காப்புத் தேவைகளுக்காக மட்டும் அவசர அம்புலன்ஸ் சேவையை அழையுங்கள்.

உயிர்காப்புக்காக மட்டுமே அம்புலன்ஸ் சேவையை நடத்துகின்றோம். உயிரற்ற உடலை எவ்வித காரணங்களுக்காகவும் அவசர அம்புலன்ஸ் சேவை மூலம் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லமுடியாது.

குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையில் இரவு நேரங்களில் அவசர நோயாளரை மருத்துவ சிகிச்சைக்குக் கொண்டு செல்வதில் ஏற்படும் சிரமங்களை நிவர்த்தி செய்யவே இச்சேவை நடத்தப்படுகின்றது.

இதனை சிலர் தவறான முறையில் பயன்படுத்த முனைகின்றனர்.

எனவே மனிதாபிமான முறையில் அவசர தேவைகளுக்கு மட்டும் அம்புலன்ஸ் சேவையை அழையுங்கள் - என்றார் அவர். (203-51)

## ஆன்மீகச் சொற்பொழிவு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் ஆன்மீகத் தொடர் சொற்பொழிவு நடத்தப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் 'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க' என்னும் தலைப்பில் ஆசிரிய ஆலோசகர் இராம. ஈஸ்வரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (203-79)

## தென்மராட்சியில் ஜி.சீ.ஈ. மாணவர்களுக்கு பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம் ஏப்,27

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு முன்னோடிப் பயிற்சி வகுப்புகளை அடுத்த மாதமளவில் நடத்த தென்மராட்சி கல்வி வலயத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் உட்படபலர் பயிற்சி வகுப்புகளை நடத்தவுள்ளனர்.

பயிற்சிகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும் நடத்தப்படவுள்ளன. (202)

# முள்ளிப் பகுதி சோதனைச் சாவடியில் கொளுத்தும் வெயிலில் பயணிகள் 'பவனி'

யாழ்ப்பாணம், ஏப்.27

பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் செல்லும் வாகனங்கள் முள்ளிப்பகுதியில் வைத்து சோதனையிடப்படுகின்றன. இதன் போது கொளுத்தும் வெயிலில் நோயாளர்களும் கைக்குழந்தைகளுடன் தாய்மாரும் வீதியில் நடந்து செல்லும் கஷ்ட நிலை ஏற்படுகின்றது.

மேற்படி சோதனைச் சாவடியில் பயணிகள் வாகனங்கள் உட்பட சகல வாகனங்களும் சோதனையிடப்படுகின்றன. பயணிகள் வாகனங்களிலிருந்து இறக்கப்பட்டு சிறிது தூரம் நடந்து செல்லப் பணிக்கப்படுகின்றனர்.

கொளுத்தும் வெயிலிலும் நோயாளர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார், கைக்குழந்தைகளுடன் தாய்மார் எனப் பாகுபாடு இன்றி நடந்து செல்லும் பரிதாப நிலை ஏற்படுகின்றது. (202)

## தென்மராட்சி வலயத்திற்கு சீருடைத் துணிகள்

யாழ்ப்பாணம்.ஏப்,27

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் சிரேஷ்ட பிரிவு மாணவர்களுக்கான சீருடைத்துணிகள் வலயக் கல்வி அலுவலகத்திற்குக் கிடைத்துள்ளன.

பாடசாலை அதிபர்கள் வலயக் கல்வி அலுவலகத்தில் சீருடைத் துணிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

கனிஷ்ட, இடைநிலை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் ஏற்கனவே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை-

கடந்த ஓகஸ்ட் மாதம் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த 300 மாணவர்களுக்கு யுனிசெவ் நிறுவனம் சீருடைத் துணிகளை வழங்கியுள்ளது.(202)

## நூற்றுக்கு மேற்பட்ட பிணக்குகளுக்கு தீர்ப்பு

சுழிபுரம்.ஏப்,27

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட இணக்கசபையின் அமர்வுகள் பிரதி ஞாயிறுக்கிழமைகளில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இடம்பெறுகின்றன.

இந்தச் சபைமூலம் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட பிணக்குகள் தீர்த்துவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (202-28)

# குடாநாட்டில் மின் தடை காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிப்பு

நல்லூர்,ஏப்.27

குடாநாட்டில் அண்மைக்காலமாக முன்னறிவிப்பு எதுவுமின்றி அடிக்கடி மின் தடை அமுல்படுத்தப்படுகின்றது. இரவுநேரங்களில் அதிகளவில் மின் தடைப்படுவதால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது என்று பெற்றோர் தரப்பில் முறையிடப்படுகின்றது.

மின் தடைக்கு மின்சார சபை அதிகாரிகள் பல்வேறு காரணங்களைக் கூறிவருகின்றனர். மின் விநியோகத்தைச் சீராக மேற்கொள்வற்கு தற்போது வசதி இல்லை எனவும் - வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் உதவியுடன் மின் விநியோகத்தைச் சீராக்க மின்சாரசபை முயற்சித்து வருவதாகவும் கூறப்பட்டது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கல்வி நடவடிக்கையில் மின் தடையால் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது.

இதனைக் கருத்தில் கொண்டு மின்விநியோகத்தை சீரமைப்பதற்கான உரிய நடவடிக்கைகளை காலம் தாழ்த்தாது உடன் முன்னெடுக்குமாறு பாதிக்கப்படுவோர் கோரிக்கை விடுக்கின்றனர். (202-111)

## மூளாய் வைத்தியசாலைக்கு சிகிச்சை உபகரணங்கள்

சுழிபுரம். ஏப்,27

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி வைத்திய உபகரணங்கள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நிறுவனங்கள் இந்த உபகரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளன. (202-28)

## வலி.தென்மேற்கில் சின்னம்மை நோய் பரவுகிறது

வலி.தென்மேற்கு,ஏப்.26

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் பொக்குளிப்பான் (சின்னம்மை) நோய் பரவி வருகின்றது. பண்டத்தரிப்பு, மாதகல், மானிப்பாய் ஆகிய பகுதிகளில் இத்தொற்று நோய் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது .

வெப்பநிலையினால் செங்கண்மாரி, சிரங்கு ஆகிய நோய்களின் தாக்கத்தினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். (1-135)

## தம்பசிட்டி சிகிச்சைப் பிரிவு கிராமிய வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டது

வடமராட்சி,ஏப்.26

வடக்கு மாகாண சித்த ஆயுள்வேத வைத்தியத் திணைக்களம், தம்பசிட்டியில் இயங்கி வந்த சிகிச்சைப் பிரிவை கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தியுள்ளது.

நீண்ட காலமாக இப்பிரதேசத்துக்கென ஓர் ஆயுள் வேத வைத்தியசாலை அமைக்கப்படவில்லை. பருத்தித்துறை அரசினர் ஆயுள்வேத மத்திய மருந்தகத்தைச் சேர்ந்த வைத்தியர்கள் வாரத்திற்கு மூன்று நாள்கள் சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சைகளை மேற்கொண்டு வந்தனர்.

பிரதேச மக்களும் பொது அமைப்புகளும் விடுத்த கோரிக்கையை அடுத்து மேற்படி சிகிச்சைப் பிரிவு கிராமிய ஆயுள் வேத வைத்தியசாலையாக மாற்றப்பட்டுள்ளது. இவ்வைத்தியசாலைக்கென நிரந்தர வைத்தியர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.(202)

## சுயதொழில் புரிவோருக்கு ஓய்வூதியத் திட்டம்

யாழ்ப்பாணம்.ஏப்,27

தென்மராட்சி பிரதேசத்தில் சுயதொழில் புரிவோருக்கு சமூக பாதுகாப்பு ஓய்வூதியம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொள்ளவிரும்பும் சுயதொழில் புரிவோர் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

# சிறுதானிய பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க திட்டம் நடைமுறையில்

யாழ்ப்பாணம்,ஏப்.27

குடாநாட்டின் சிறுதானியப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் முன்னெடுத்து வருகின்றது.

குடாநாட்டில் பிரதேச செயலர்களின் ஒத்துழைப்புடன் எள், பயறு, உழுந்து, கௌபி போன்ற சிறுதானிய [illegible] இடங்கள் தெரி [illegible]

விவசாய சம்மேளனங்களுக்கூடாக தானிய வகைகளைப் புனர்வாழ்வுக் கழகம் வழங்கி வருகின்றது.

கழகத்தின் தலைவர் பேராசிரியர் வி.பி. சிவநாதன் தலைமையிலான குழுவினர் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

வலி.மேற்கு, வலி.தென்மேற்கு, வலி. கிழக்கு [illegible] இத்தானிய வகைகளை ஆர்வத்துடன் பெற்று பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். (202-95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COMPUTER EXPRESS
Institute of Information Technology
Head Off : 15, Sirambiyadi Lane, Jaffna
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna
T.P:- 021-222 8250,0777 222422

**Diploma in Computerized Accounting...**

**Quick Book Premier + ACCPAC + MYOB**

ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch I : 26/04/2007 Batch II : 28/04/2007
Batch III : 29/04/2007 Batch IV : 30/04/2007

Tally புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.



## வாடகைக்கு

பருத்தித்துறை, வீரமாகாளி அம்மன் ஆலயத்திற்கு அருகில் நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள மாடி வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 2225739.



## புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர், இன்று (27.04.2007) வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,



**Raam Net. Com**
Communication & Computer Service

எனும் நிறுவனத்தை கே.கே.எஸ். வீதி, மல்லாகம் சந்தியில் மங்களகரமாக ஆரம்பித்துவைக்கவுள்ளோம். அத்தருணம் வருகை தந்து விழா வினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- ★ Pc Reparing & Maintenance
- ★ Typing & Printing
- ★ CD Writing
- ★ Designing Work

உள்நாடு, வெளிநாடு
T.P. : 060 221 2623
Fax : 021 222 5902

உரிமையாளர்,
Raam Net. Com


## கண்ணீர் அஞ்சலி



எமது இணை நிறுவனமாகிய புதிய உயர் கல்லூரியின் நிர்வாகி திருமதி சண்முகநாதன் அருள்நங்கை அவர்களின் அன்புத் தாய்

**விஜயலட்சுமி இராஜரட்ணம்**

அவர்களின் மரணச்செய்திகேட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இயக்குநர், விரிவுரையாளர்கள்,
நோர்த் லிங்கா ITT, சங்கானை, யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் நினைவு கூரலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 30.03.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் ஆறுமுகம் தம்பிராசா**

அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (27.04.2007) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் வேலணை சாட்டி தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 29.04.2007 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பாக இதனை ஏற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்)

25, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

(59715)



முன்னாள் வடமாநில கல்விப்பணிப்பாளர்
அமரர்

**இரா. சுந்தரலிங்கம்**
அவர்களின்

## நினைவு அஞ்சலிக் கூட்டம்

காலம் : நாளை 2007 -04 - 28 ஆம் நாள் சனிக்கிழமை
நேரம் : முற்பகல் 9.30 மணி
இடம் : இணுவில் அறிவாலயம்

தலைவர் : செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள் (உப அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை)

### நிகழ்ச்சிகள்

1. மங்கள விளக்கேற்றல்
2. அமரரின் படத்திற்கு மலர்மாலை அணிவித்தல்
3. தேவாரம்
4. மௌன வணக்கம்
5. வரவேற்புரை:- இ.பாலச்சந்திரன்(ஆசிரியர், யாழ்.இந்துக் கல்லூரி)
6. தலைமையுரை
7. பிரார்த்தனை உரை :- நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்.
8. அஞ்சலி உரைகள்

* பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் உபவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
* வே.தி. செல்வரத்தினம் (மேலதிக மாவட்டக் கல்விப்பணிப்பாளரும், யாழ் வலயக் கல்விப் பணிப்பாளரும்)
* ப.விக்கினேஸ்வரன் (கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)
* சச்சிதானந்தன் (அதிபர், யா/இணுவில் இந்துக் கல்லூரி)
* அ.சதானந்தன் (அதிபர், யா/இணுவில் மத்திய கல்லூரி)
* க. சிவாஜி (அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை)
* ஆசிரிய மணி அ.பஞ்சாட்சரம் (இளைப்பாறிய அதிபர், உரும்பிராய்)
* திருமதி ஆ.சிவஞானசுந்தரம் (அதிபர், யா/இராமநாதன் கல்லூரி)
* அ.பஞ்சலிங்கம் (முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)
* சி.இராசநாயகம் (இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
* தலைவர் நிறைவுரை
* நன்றியுரை:- குடும்பத்தினர் சார்பில் த. தேவராசா (முன்னாள் உப அதிபர்,.யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)

அதிபர்கள், ஆசிரியர்கள், ஏனைய அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில். (59909) அழைப்புக்குழு.


கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலமாகவோ அல்லது விமானம் மூலமாகவோ உடனுக்குடன் உங்கள் பொதிகள் அனுப்பி வைக்கப்படும். மொத்த வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கிளியரின்ஸ் இல்லாத பொருள்களுக்கு M.O.D.பெற்று உத்தரவாதத்துடன் உடன் அனுப்பி வைக்கப்படும்.

தொடர்பு: **EURO GROUPS**
0773846998, 0114542190.


## தென்னிந்திய திருச்சபை - யாழ்.ஆதீனம் சமயக் கல்விக் குழு

★ தொடர் கருத்தமர்வு I - கிறிஸ்தவம்
★ காலம் : நாளை 28.04.2007 சனிக்கிழமை காலை 9மணி - 12மணிவரை
★ இடம் : யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு, யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரி முன்பாக)

விடயம் :
பரிசுத்த ஏடுகளைக் கற்றல் இறைவாக்கினர்.

★ கருத்துரை வழங்குபவர் :
P.தேவராசா (B.A (Hons) Dip.in.Edu.)
(ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டதாரிகள் பிரிவு விரிவுரையாளர்.)

★ 2007 ஒகஸ்ட் க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றும் சகல பாடசாலை மற்றும் தனியார் பரீட்சார்த்திகளையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ பாடக்குறிப்புக்கள் இலவசமாக வழங்கப்படும்.

ஒருங்கிணைப்பாளர்,
சமயக்கல்விக் குழு, பரீட்சைகள் பிரிவு.

## எண்ணெய்க்காப்பு

வடமராட்சி நவிண்டில் அநீதர ஐயப்ப சுவாமிக்கும் ஆஞ்சநேய சுவாமிக்கும் நாளை (28.04. 2007) சனிக்கிழமை காலை 8மணி முதல் 2மணி வரை. அடியார்கள், ஐயப்ப சுவாமிமார்கள் எண்ணெய் காப்பு சாத்தி வழிபடலாம். 29.04. 2007 ஞாயிறு காலை 9மணிக்கு மஹாகும்பாபிஷேகம்.

"சுவாமியே சரணம்"

ஆலயக்குருசுவாமி,
பிரம்மஸ்ரீ.ந.சுந்தரேஸ்வரசர்மா,

(59766)


## விற்பனையாகின்றன! புதிய பாடநூல்கள்

* பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை கற்போருக்கான புதிய பாடநூல்கள் ஒரே இடத்தில் விற்பனையாகின்றன!

இடம்: யாழ்.மத்திய கல்லூரி கேட்போர் கூடம் (நர்பர்மன்டபம் - 3ஆம் மாடி)
காலம்: 25.04.2007 முதல் 06.05.2007 வரை
நேரம்: காலை 8.30 மணி முதல் பி.ப 3.00 மணி வரை
வியாபாரிகள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள் அனைத்துக்கும் குறித்த விலையில் 10% கழிவு வழங்கப்படும்.

தொடர்பு: ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2573


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி இராஜநங்கை சிவபாலன் அவர்களின் அன்புத் தாய்

**அமரர் விஜயலட்சுமி இராஜரட்ணம்**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி,
மானிப்பாய். (59933)

அதிபர்,
ஆசிரியர்கள், ஊழியர்கள்.

## துயர் பகிர்கின்றோம்

யாழ். புதிய உயர்கல்லூரியின் இயக்குநரும் இந்து நாகரிக விரிவுரையாளருமாகிய திருமதி ச.அருள்நங்கை அவர்களின் பாசமிகு தாயும் கல்லூரியின் நிர்வாகி ம.சண்முகநாதன் அவர்களின் மாமியும் ஆகிய

**விஜயலட்சுமி இராசரத்தினம் (சோதி)**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கிறோம்

யாழ்.புதிய உயர்கல்லூரி,
விரிவுரையாளர்கள்.

(59732)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

### செல்வி கந்தசாமி நித்தியகல்யாணி

கலைப்பட்டதாரி (B.A.)



மலர்வு
02 .05. 1980

திதி : பூர்வபட்ஷ ஏகாதசி

உதிர்வு
08 .05. 2006

பசுமை நிறைந்த
சோலையிலே
பாசமலராய்
பிறந்த நீ
பாதியிலே
வாடியதேன்?
அப்பா, அப்பா
என அடிக்கடி
அழைப்பாயே
இனி எப்போ
உன் குரல் கேட்டிட

சிறு புல்லில் சிறு
ஓசையாக
சிறகடித்து
சீராய் வாழும்
வேளையில்
எம்மை - கண்
கலங்கிடவிட்டு
காற்றாய்
பறந்து சென்றாயே
இனி எப்போ
உன்னைக் காண்பேன்.

உன் பிரிவால் துயருறும்:
அம்மா, அப்பா,
சகோதரர்கள்,

மகாத்மா வீதி,
(A/50085)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கிரிக்கெட் குழு தோல்வி அடைவதற்கு மன்னிப்புச் சபை செய்திருக்க வேண்டியது இதுதான்...!

**கற்பனைச் சித்திரங்களில் நகைச்சுவையூடாக யதார்த்த உண்மைகளைக் குறிப்பிட்டுக் காட்டி வாசகர்களை உணர வைக்கும் எழுத்து நடை எல்லோருக்கும் கைவரும் ஒன்றல்ல.**

**அந்த வகையில் 'லக்பிம' பத்திரிகையில் ஆசிரியர்பீடத்தைச் சேர்ந்த நியதமானி டிமெல் வாராந்தம் 'லக்பிம' பத்திரிகையில் எழுதிவரும் 'மானியின் பத்தி' இலங்கை அரசியல் யதார்த்த நிலையை நகைச்சுவையுடன் தலையில் குட்டி உணரவைக்கும் ரகத்தைச் சேர்ந்தது. கடந்த 15ஆம் திகதிய 'ஞாயிறு லக்பிம' இதழில் வெளியான 'மானியின் பத்தி'யின் தமிழ் வடிவத்தின் தொகுப்பு இது.**

**இது** சிங்கள புத்தாண்டு வாரம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததொரு விடயமே. ஆனாலும் புத்தாண்டுப் பரபரப்பு என்பதற்கு மேலாக இந்த வாரத்தில் சகலரதும் பேச்சிலும் அடிபடும் ஒரு முக்கிய விடயமாக அமைந்தது சர்வதேச மன்னிப்புச் சபை குறித்த செய்தியே ஆகும். நான் சர்வதேச மன்னிப்புச் சபை தொடர்பான எனது அனுபவமொன்றைப் பற்றியே இவ்வாரப் பத்தியில் எழுதுவதென தீர்மானித்தேன். அதன் பொருட்டு நான் எழுதுவதற்கு நான் உத்தேசித்த கதை இதுதான்.

எனது நண்பரான மனோதத்துவ நிபுணர் ஒருவர் சில மாதங்களுக்கு முன்னர் ஒருநாள்



என்னைக் கண்டு பேச வீட்டுக்கு வந்திருந்தார்.

''நான் வெளிநாடொன்றில் ஏதாவது வேலையொன்று தேடிக்கொள்ளலாம் என்று முயற்சித்துக்கொண்டிருக்கிறேன்'' என்றார் அவர்.

ஒருகணம் தயங்கிவிட்டு ''உங்களுக்குத் தெரிந்த யார் மூலமாவது எனக்கு சர்வதேச மன்னிப்புச் சபையில் ஒரு வேலை வாங்கித் தர இயலுமா?'' என அவர் என்னைக் கேட்டுக் கொண்டார்.

அவரது பேச்சைக் கேட்டு நான் ஆச்சரியப்பட்டேன். ''சர்வதேச மன்னிப்புச் சபையில் என்றால் என்னால் ஓரிருவரைத் தொடர்புகொண்டு விசாரித்துப் பார்க்க முடியும்'' இவ்வாறு அவருக்குக் கூறிய நான் ''ஆனால் உம்மைப் போன்ற மனோதத்துவ நிபுணர்களுக்கு சர்வதேச மன்னிப்புச் சபையில் பொருத்தமான ஒரு வேலை எதுவும் இருக்காதே? என எனது மனதில் தோன்றிய சந்தேகத்தை வாய்விட்டு அவரிடமே கூறிவிட்டேன்.

எனது அப்பேச்சைக் கேட்ட அந்த நண்பர் ஒருகணம் வாய்விட்டுச் சிரித்தார்.

''சர்வதேச மன்னிப்புச் சபைக்குத் தற் போது மனோதத்துவ நிபுணர்களின் உதவியே மிக மிகத் தேவைப்படுகிறது''

மேற்கண்ட விதத்தில் கூற ஆரம்பித்த எனது நண்பர் தொடர்ந்து, ''மனோதத்துவ நிபுணர்களிடம் ஆலோசனை கேட்டு நடந்திருந்தால் மேற்கிந்தியத்தீவுகளில் நடந்துகொண்டிருக்கும் சர்வதேச கோப்பைக்கான கிரிக்கெட் போட்டிகளின்போது இலங்கை அரசுக்கு எதிராகத் தாம் மேற்கொள்ள ஆரம்பித்த எதிர்ப்புப் பிரசார நடவடிக்கைகளை இப்படி இடைநடுவில் நிறுத்திக் கொள்ளவேண்டிய நிலைமை சர்வதேச மன்னிப்புச் சபைக்கு ஏற்பட்டிருக்காது'' என நீண்டதொரு பிரசங்கமே செய்துவிட்டார். நான் ஒருகணம் ஆச்சரியப்பட்டுவிட்டேன். ''எப்படி? நீர் சொல்வது எப்படிச் சாத்தியமாகியிருக்கும்'' எனது இந்தக் கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் எனது நண்பர் மீண்டும் தன்னை ஒருகணம் சுதாகரித் துக்கொண்டார்.

''சர்வதேச மன்னிப்புச் சபையினர் மேற்கிந்தியத் தீவுகளில் போய் ''இலங்கையே! விதிமுறைகளுக்கமைய செயற்படு'' எனக் கூறி மேற்கொள்ள முயன்ற பிரசாரத்தால் இலங்கையில் கருத்து முரண்பட்டு ஒருத்தருக்கொருத்தர் மோதிக்கொண்டிருந்த தரப்பினரை ஒன்றிணைந்து தமக்கெதிராகப் போர்க்கொடி தூக்க வைத்ததைத் தவிர வேறெதனைச் சாதித்தனர்?''

நண்பரின் இந்தக் கேள்வியிலும் ஏதோவோர் உண்மை பொதிந்திருப்பதாவே எனக்குப்பட்டது.

''உண்மையில் என்னைப் போன்ற மனோதத்துவ நிபுணர்களின்ஆலோசனையைப் பெற்று அதன்படி தமது பிரசாரத்தைச் சர்வதேச மன்னிப்புச் சபையினர் முன்னெடுத்திருந்தால் நிச்சயமாக இலங்கைக் கிரிக்கெட் அணியினரின் மனோநிலையைக் குழப்பிவிட்டிருக்க முடிந்திருக்கும்''

நண்பரின் மேற்கூறிய வகையிலான கருத்தைக் கேட்டு எனது மன நிலை குழம்பும் போலிருந்தது. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு ''நீங்கள் கூறுவது எந்தவகையில் சாத்தியப்பட்டிருக்கமுடியும்'' என நண்பரை நான் திருப்பிக் கேட்டு வைத்தேன்.

### சுலோக அட்டைகள்

உண்மையில் சர்வதேச மன்னிப்புச் சபையினர்,

''இலங்கை சட்டத்தை மதிக்குமொரு நாடு'',

''இலங்கையில் தர்மம் அரசோச்சுகிறது'',

''நியாயம் நிலை நிறுத்தப்படுவதை இலங்கையில் சென்று பார்த்துத் தெரிந்துகொள்வீர்'',

''சமதர்மத்தின் பிறந்தமண் இலங்கையே!!'',

''சுதந்திரம் என்பது இலங்கையின் மற்றொரு பெயர்'',

''மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதில் ஆசியக் கண்டத்திலேயே இலங்கைதான் முதலிடம் வகிக்கிறது''

என்றவாறான சுலோகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளைக் கைகளில் ஏந்தியவாறு எமது இலங்கைக் கிரிக்கெட் அணியினர் கலந்துகொள்ளும் போட்டிகளின் போது மைதானத்தைச் சுற்றிவரும் நடைமுறையைப் பின்பற்றியிருந்திருக்கவேண்டும்''

**அது என்னவென்று அவசரப்படாதீர்கள். ஆறுதலாக வாசித்தும் பாருங்களேன்...!**

மேற்கண்டவாறு நீண்டதொரு பிரசங்கத்தையே நிகழ்த்திவிட்ட களைப்பில் நண்பர் ஒருசில நிமிடங்கள் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டார்.

அவரது மேற்கண்ட கருத்து எனது மனதில் மேன்மேலும் குழப்பத்தை ஏற்படுத்துவதாகவே தோன்றியது. எதற்காக சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசுக்கு ஆதரவான விதத்திலான வாசகங்கள் பொறிக்கப்பட்ட அட்டைகளை ஏந்திச் செல்லவேண்டுமென எனது நண்பர் கூறுகிறார் என்பது எனக்கு அப்போது உண்மையில் புரியவேயில்லை. இத்தனைக்கும் எனது நண்பர் இலேசானதொரு பேர்வழியல்ல; பெயர்பெற்றதொரு மனோதத்துவ நிபுணராச்சே? எதற்கும் எனது சந்தேகத்தை வாய்விட்டே கேட்டுவிட்டேன்.

அப்படிச் செய்வதால் இலங்கை அரசுக்கு எதிரான உணர்வலையொன்றை எவ்வாறு ஏற்படுத்த முடியும்? முகத்தில் ஒரு புன்முறுவலுடன் நண்பர் எனது சந்தேகத்துக்குப் பதிலளிக்க ஆரம்பிக்கிறார்.

### சுலோக அட்டைகளும் அதன் தாக்கங்களும்

''சர்வதேச மன்னிப்புச் சபையினரின் ஏற்பாட்டில் இத்தகைய சுலோக அட்டைகளைக் கைகளில் ஏந்தியவண்ணம் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தரப்பினர் அந்தக் கிரிக்கெட் மைதானத்தை வலம்வரும் வேளையில் முதலில் அவர்கள் மைதானத்தில் கிரிக்கெட் போட்டியில் ஈடுபடும் இலங்கை கிரிக்கெட் அணியினரின் கண்களிலேயே தட்டுப்படுவர். அந்த சுலோக அட்டைகளில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்களை வாசித்ததும் இலங்கை கிரிக்கெட் அணியினருக்குக் கட்டுப்படுத்திக்கொள்ள இயலாத அளவுக்குச் சிரிப்புப் பொத்துக்கொண்டுவரும். அந்த சுலோக அட்டைகளில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்கள் எந்த அளவுக்கு இமாலயப் பொய் வார்த்தைகள் என்பது அவர்களுக்கு மட்டும்தான் அனுபவத்தில் புரியுமல்லவா? தாங்கிக்கொள்ள இயலாத சிரிப்பால் அவர்கள் அந்த மைதானத்தில் நிலத்தில் உருண்டு புரண்டு சிரிப்பார்கள் என்பதில் ஐயமேயில்லை. அதன் காரணமாகத் தாம் பங்குகொள்ளும் கிரிக்கெட் போட்டி குறித்த அவர்களது லயிப்பில் திடீர்ச் சிதைவு ஏற்பட்டேயாகும். துடுப்பெடுத்தாடும் இலங்கை அணி வீரரொருவர் சுலோக அட்டை வாசகங்கள் நினைவுக்கு வரும்போது பொத்துக்கொண்டு வரும் சிரிப்பை அடக்கமுடியாது திண்டாடநேரும். அதன் காரணமாக அவர் எதிர்த்தாடவுள்ள பந்து மீதான அவரது கவனம் கலைந்துபோக நேரும். அதன் பலாபலன் அவர் ஆட்டமிழந்து மைதானத்தைவிட்டு வெளியேறுவதாகவே அமைய நேரும். இலங்கை அணியின் வீரரொருவர் எதிரணித் துடுப்பாட்ட வீரருக்குப் பந்துவீச ஓடிவரும்போது திடீரென அவரது மனதில் அந்தச் சுலோக அட்டை வாசகங்கள் நினைவில் வருமானால் அவ்வளவுதான். தாங்க இயலாத சிரிப்பு அவர் வீசும் பந்தை எங்கோ திசைதிரும்பிச் செல்ல வைத்து பார்வையாளர்கள் முன் அவரை ஒரு கோமாளி ஆக்கிவிடும். சர்வதேச மன்னிப்புச் சபை என்னைப் போன்ற மனோதத்துவ நிபுணர்களிடம் இத்கைய ஆலேசானைகளைப் பெற்றுத் தமது அத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்திருப்பார்களானால் இலங்கை கிரிக்கெட் அணியைச் 'சுப்பர்8' போட்டிக் குழுவில்கூட இடம்பிடிக்க இயலாதவாறு மனோதத்துவ ரீதியில் தோற்கடித்திருக்க முடியும்.



அதேசமயம் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களுக்கெதிராகச் சர்வதேச மன்னிப்புச் சபை செயற்படுகிறது என்ற நேரடிக் குற்றச்சாட்டும் எழுந்திருக்காது. என்ன செய்யமுடியும்? சர்வதேச மன்னிப்புச் சபையினர் என்னைப்போன்ற மனோதத்துவ நிபுணர்களின் திறமையைத் தான் பயன்படுத்தத் தவறிவிட்டார்களே? நண்பரின் இந்தப் பேச்சைக் கேட்டு நான் ஒருகணம் அழுவதா சிரிப்பதா என்பது புரியாமல் தடுமாறுகிறேன். ✸

**தமிழில்: ராஜா**

---

# பூமிக்குப் போட்டியாக இன்னொரு 'சூப்பர் பூமி' கண்டுபிடிப்பு!

## தண்ணீர், உயிரினங்கள் இருக்கின்றனவா என ஆய்வு

நியூயோர்க், ஏப்ரல் 27

பூமியைப் போன்றே தட்பவெப்பநிலை காணப்படும் கிரகம் ஒன்றை ஐரோப்பிய விண்வெளி ஆய்வு விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் கிரகத்துக்கு 'சூப்பர் பூமி' என்றும் பெயரிட்டுள்ளனர். அதில் உயிரினம் ஏதாவது இருக்கிறதா, அதன் தட்ப வெப்பம் என்ன என்பதற்கான முழுப் பதிலும் கிடைக்க சிறிது காலம் ஆகும்.

சுவிட்ஸர்லாந்திலுள்ள விண்வெளி ஆய்வு மையத்தில் ஸ்டீபன் உத்ரே என்ற விஞ்ஞானி தலைமையில் விஞ்ஞானிகள் குழு சூரிய மண்டலத்துக்கு வெளியே பூமியைப் போன்ற கிரகம் உள்ளதா என்ற ஆய்வில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் ஆய்வில் பல புதிய தகவல்கள் கிடைத்துள்ளன. அதன் விவரம் வருமாறு:-

பூமியிலிருந்து 20 ஒளி ஆண்டு தொலைவில் துலா ராசி விண்மீன் கூட்டத்தில் ஒரு சிவப்பு நட்சத்திரம் உள்ளது. இதற்கு 'கிளீஸ் 581' என்று விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர். இந்த நட்சத்திரத்தை ஒரு கிரகம் சுற்றி வருகிறது. இந்தக் கிரகம் பூமியை விட ஒன்றரை மடங்கு அளவே பெரியது.

ஆனால், பூமியை விட ஐந்து மடங்கு நிறை கொண்டது. பூமிக்கும், சூரியனுக்கும் உள்ள தூரத்தை விட 'கிளீஸ் 581' நட்சத்திரத்துக்கும், அதைச் சுற்றிவரும் கிரகத்துக்கும் உள்ள தூரம் மிகக் குறைவு. நான்கில் ஒரு பங்கு தூரமே உள்ளது. இருப்பினும், இந்த நட்சத்திரம் சூரியனை விட பாதியளவு வெப்பத்தையே வெளிப்படுத்துகிறது.

எனவே, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கிரகத்தில் பூஜ்யத்தில் இருந்து 40 டிகிரி செல்சியஸ் வரையே வெப்பம் காணப்படுகிறது. இந்த தட்பவெட்ப நிலை தண்ணீர் இருப்பதற்கான சாத்தியக் கூறுகளைச் சுட்டிக் காட்டுகிறது. எனவே, இந்தக் கிரகத்தில் உயிரினங்கள் இருக்க வாய்ப்பிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்தக் கிரகத்துக்கு 'சூப்பர் பூமி' எனப் பெயரிட்டுள்ளனர் விஞ்ஞானிகள். (சி)

---

# நெதர்லாந்துப் பாடசாலைகளில் மத சின்னங்கள் அணியத் தடை

மத அடையாளச் சின்னங்களை பாடசாலைக்கு அணிந்து வர நெதர்லாந்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்கள் கருதி பொது இடங்களில் 'பர்தா' மற்றும் முகத் திரைகளை அணிந்து வருவதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது என நெதர்லாந்து அரசு கடந்த ஆண்டு முடிவு செய்தது. ஆனால், இதற்கான சட்டம் இன்னும் அமுல் படுத்தப்படவில்லை. இருந்தாலும், நெதர்லாந்தில் பல இடங்களில் 'பர்தா' முகத்திரைகளை அணிந்து வருவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது முதல்முறையாக பிரபலமான ஐந்து கிறிஸ்தவ பாடசாலைகளில் மாணவிகள் தலையை மறைக்கும் வகையிலான துணிகளை அணிந்து வருவதற்கும், மத அடையாளச் சின்னங்களை அணிந்து வருவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (சி)

---

# அமெ. துணை ஜனாதிபதி மீதான தாக்குதல்: அல்-குவைதா இயக்கம் பின்னணியில்

கடந்த பெப்ரவரி மாதம் அமெரிக்காவின் துணை ஜனாதிபதி டிக் செனி மீது குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னணியில் அல் - குவைதா இயக்கமே உள்ளது என தலிபான் இயக்கத்தின் தளபதி முல்லா தாதுல்லா தெரிவித்துள்ளார்.

அல்-ஜஸீரா செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் தளபதி முல்லா. அல் - குவைதா இயக்கத்திற்கு நெருக்கமானவரும், தென் ஆப்கானிஸ்தானின் தலிபான் தளபதியுமானவர் முல்லா தாதுல்லா.

கடந்த பெப்ரவரி மாதம் ஆப்கானிஸ்தானிற்கு அமெரிக்கத் துணை ஜனாதிபதி விஜயமொன்றை மேற்கொண்டார். அப்போது அவர் ஆப்கானிஸ்தானின் பக்ரம் எனும் பகுதியிலுள்ள அமெரிக்க இராணுவ முகாம் ஒன்றுக்கும் சென்றிருந்தார். அவர் ஒரு மணித்தியாலயத்துக்குப் பின் நுழைவாயில் தற்கொலைக் குண்டு ஒன்று வெடித்தது. இதில் 20 சிவிலியன்கள் உட்பட27 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் அமெரிக்கத் துணை ஜனாதிபதி டிக் செனியைக் குறி வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் என்றும் -

தலிபான் இயக்கத்தினரே இவ்வாறான கோழைத்தனமான தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர் என்றும் -

ஆனால், துணை ஜனாதிபதிக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றும் அமெரிக்கா தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், அமெரிக்கத்துணை ஜனாதிபதியைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல் அல் குவைதா இயக்கத்துக்கே தொடர்புள்ளது என தலிபான் இயக்கத் தளபதி தெரிவித்திருக்கிறார். (சி)

---

# உக்ரைன் நாடாளுமன்றத் தேர்தல் ஜூன் மாதத்திற்கு ஒத்திவைப்பு

உக்ரைன் நாட்டின் நாடாளுமன்றத் தேர்தலை அந்நாட்டு ஜனாதிபதி விக்டர் யுஸ்சென்கோ ஜூன் மாதம் 24ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

எதிர்க் கட்சியினரின் அழுத்தங்கள் மற்றும் அரசிற்கு எதிரான தொடர் ஆர்ப்பாட்டங்கள் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் மே மாதம் 27ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த நாடாளுமன்றத் தேர்தலே ஜூன் மாதம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பிரதமர் விக்டர் யனுகோவ்ச்சின் அரசு தேர்தல் விதிமுறைகளை மீறியுள்ளது என்றும் -

தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கவேண்டிய நிதியை அரசு நிறுத்தி வைத்தது என்றும் -

இது தொடர்பாக 18 நீதிபதிகள் கொண்ட குழு விசாரணை நடத்தி வருகிறது என்றும் -

இது குறித்து தீர்ப்பு அறிவிக்கப்பட்ட பின்னரே தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

இதனாலேயே தேர்தல் திகதி ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மோசடிகள் தொடர்பாக விசாரணை நடத்திவரும் நீதிபதிகள் குழு மே மாதம் 5 ஆம் திகதி தீர்ப்பு வழங்குவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
பிள்ளையார் துணை

# பருத்தித்துறை மாதனை
# ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோயில்

## திவ்ய மகோற்சவ விஞ்ஞாபனம் 28.04.2007 (சனிக்கிழமை)

## புதிய சித்திரத்தேர்
# வெள்ளோட்ட விழா

**விநாயகப்பெருமான் அடியார்களே!**

*சர்வ ஆன்மாக்களுக்கும் திருவருள் பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீகற்பகப்பிள்ளையார் கோயிலில் வீற்றிருந்தருளும் பருத்தித்துறை மாதனை எனும் திவ்வியபதியில் நிகழும் மங்களகரமான சர்வசித்து வருஷம் சித்திரைத் திங்கள் 15ஆம் நாள் (28.04.2007) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு*

உடுவிலைச் சேர்ந்த கலா விற்பன்னர்களும் கலைவளர் மாதனை வாழ் சிற்பகலா வித்தகர்களும், இந்தியா, தமிழகம் தந்த சிற்ப வல்லுநர்களின் துணையுடன் நிர்மாணித்துத் தந்த சர்வ லட்சணங்களும் பொருந்தி அழகுற வடிவமைக்கப் பெற்று, **டாக்டர் ப.கிருபரன் (லண்டன்) அவர்களால் வழங்கப்பட்ட புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா** நடைபெற ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் திருவருள் பாலித்துள்ளார்.

**அடியார்கள் அனைவரும் வருகைதந்து எம்பெருமானின் அருட்காட்சியைக் கண்டு அவர் அருளைப் பெறுக!**



### ஆலய குருவின் ஆசிச் செய்தி

வடமராட்சி மாதனை பதியில் கோயில் கொண்ட கற்பக விநாயகர் ஆலயத்தின் புதிதாக அமைக்கப் பெற்ற சித்திரத் தேர் வெள்ளோட்ட நன்னாளில் மாதனைப் பதி வாழ் மக்கள் எல்லோருக்கும் விநாயகப்பெருமான் தேர் ஏறி வந்து பல அருள் கொடுத்து நலமாக வாழ வாழ்த்துகிறோம்.

ஆலய குரு
சிவஸ்ரீ இ.நாராணயக் குருக்கள்.

(59885)

பருத்தித்துறை மாதனை,
ஸ்ரீ கற்பக பிள்ளையார் கோயில்.
**தேர்த்திருப்பணிச் சபையினர்.**

---

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்–வ.து.
### பதவி வெற்றிடம்
### வாகனச்சாரதி

மேற்படி பதவிக்கு யாழ்.மாவட்டத்தில் நிரந்தரமாக வசிக்கின்ற தகுதியுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) சம்பளத்திட்டம் : கூ.வே.ஆ.சு.நி. 31/99 - 312/14 — 3750 - 5200 / 70 × 10 - 75 × 10 (ஏனைய அனுமதிக்கப்பட்ட சம்பளப் படிகளும் வழங்கப்படும்)

2) தகைமை : கூ.வே.ஆ.சு.நி. 108/81 - 312/12 — 5ஆம் வகுப்புக் கல்விச்சான்றிதழும் பஸ் வண்டி/லொறி/ட்ரெயிலருடன் டிராக்டர் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுவம்.

3) வயது : 25 தொடக்கம் 50 வரை
(சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)

4) விண்ணப்ப முடிவு திகதி : 15.05.2007

5) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் சங்கத்தினால் கோரப்படும் உரொக்க, ஆதன பிணைகள் சமர்ப்பிக்க வேண்டும்.

6) சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்ப படிவங்களை ரூபா 10 செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் பெற்று விண்ணப்பத்தைச் சரிவரப் பூர்த்திசெய்து 2007.05.15ஆம் திகதிக்கு முன் பொது முகாமையாளர், 127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்ப படிவங்கள் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல்மூலையில் ''வாகனச் சாரதிகளுக்கான விண்ணப்பம்'' என எழுதப்பட்டிருக்கவேண்டும்.

07) தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களைச்சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழி வகுக்கும்.

குறிப்பு:
யாழ்ப்பாணம். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிக்கின்ற விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(சி/50089) - **பொதுமுகாமையாளர்.**

---

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1969இல் பிறந்த பூராட நட்சத்திரம், 7இல் செவ்வாயுடைய பட்டதாரி ஆசிரியைக்கு தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு:-
விளம்பர இல.: 2966
மே/பா உதயன்
(59918)

---

### கணனி உதிரிப்பாகங்கள் விற்பனைக்குண்டு

ஒருவருட உத்தரவாதத்துடன் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

P4 Mother Board, CD Drive, Flash Drive, Modem, DVD Writer, Hard Dish, Combo Drive, Printer, Mouse, Power tree UPS, Etc.

**Sky Computer Systems**
No. 89 A, கண்டி றோட், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(59934) தொ.பே.இல.: 021 222 9109

---

### பதவி வெற்றிடம்

எமது மருத்துவ நிலையத்திற்கு மருத்துவ உதவியாளர்கள் தேவை. ஆர்வமுடையவர்கள் நேரில் சமுகம் தரவும்.

திகதி: **29.04.2007**
நேரம்: நண்பகல் 12 மணி
இடம்: **சுகர்னி மருத்துவ நிலையம்,**
578, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: **021 222 8222**
(59927)

---

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

எமது பாடசாலையின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவும் எதிர்வரும் வைகாசி மாதம் 3ஆம் திகதி வியாழக்கிழமை (03.05.2007) அன்று பி.ப. 2 மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளன. இதில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(59928)

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**யா/முத்துத்தம்பி ம.வித்தியாலயம்.**

---

## தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து.)
பதிவு இல.: ஜே/1591 - 6.3.72

### பதவி வெற்றிடம்

1) பதவி :- **முகாமையாளர்**
2) குறியீட்டு இலக்கம் :- **115/13**
3) சம்பள அளவுத் திட்டம் :- 9950 - 85 × 10, 90 × 10 - 11,700/- சங்கம் வழங்கும் இதர படிகளும்.
4) தகைமைகள் :- (அ) கூட்டுறவுப் பணியாளர் 14ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
அல்லது
(ஆ) கூட்டுறவுப் பயிற்சிநெறி (சாதாரணம்) சித்தி/ க.பொ.த (சாதாரணம்) எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/கணிதம், சிங்களம்/தமிழ் மொழியினை உள்ளடக்கியதாக 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியும் அத்துடன் சம்பந்தப்பட்ட வர்த்தகத்துறையிலான பதவியில் 02வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் (பனைவெல்ல உற்பத்தி, போத்தலில் கள் அடைத்தலில் சிறந்த தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்)

வயது :- **18 - 45**

சங்கம்கோரும் பிணை ரொக்கமாகவும், ஆதனமாகவும் செலுத்தவேண்டும். விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் விநியோகிக்கப்படும் விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து விண்ணப்பிப்பவர்கள், தங்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கவேண்டும். சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பப்படிவத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ், அனுபவச்சான்றிதழ் போட்டோப்பிரதி இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் பொதுமுகாமையாளர், தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், புகையிரத நிலைய வீதி, மல்லாகம் என்ற முகவரிக்கு 09.05.2007 ஆம் திகதி 12மணிக்கு முன்பாக பதிவுத்தபாலில் விண்ணப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''முகாமையாளர் 115/13 பதவிக்கான விண்ணப்பம்'' என எழுதப்படல் வேண்டும். பூரணப்படுத்தாத விண்ணப்பமும், தகுதியில்லாத விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

புகையிரத நிலைய வீதி,
மல்லாகம்.
20.04.2007 (சி/50079) - **பொதுமுகாமையாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.நு.: 222 9944

## நடைமுறைப்படுத்தப்படாத சுற்றறிக்கையால் என்ன பயன்?

பிரான்ஸில் மன்னர் ஆட்சிக்கு எதிராக மக்களின் பிரெஞ்சுப் புரட்சி வெடிக்கின்ற காலத்தில் இடம்பெற்ற ஒரு சம்பவம் குறித்துப் பலரும் பேசுவார்கள். அநீதி ஆட்சியால் வறுமையிலும் பசியிலும் பட்டினியிலும் வாடிய மக்களின் சார்பில் லூயி மன்னனிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டதாம். "வயிற்றை ஒரு நேரம் கூட நிரப்புவதற்கு பாண்(றொட்டி) கூடக் கிடையாது மக்கள் கஷ்டப் படுகின்றார்கள். அவர்கள் என்ன செய்வது?" - என்று கேட்க, "அப்படியா? பாண் இல்லாவிட்டால் அதற்குப் பதிலாகக் 'கேக்' வாங்கிச் சாப்பிடுங்கள்!" - என்று நிலைமை புரியாத மன்னன் பதிலளித்தானாம்.

அந்த எதேச்சாதிகார ஆட்சி பின்னர் மக்கள் புரட்சியால் கவிழ்க்கப்பட்டமை சரித்திரம்.

"பாண் இல்லாவிட்டால் கேக் சாப்பிடுங்கள்!" - என்ற அந்தத் தொனியில் இருக்கின்றது கைதுகள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ இப்போது வெளியிட்டிருக்கும் சுற்றறிக்கை.

முப்படைத் தளபதிகளுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் இந்தச் சுற்றறிக்கையை அவர் அனுப்பி வைத்திருக்கின்றார்.

கேட்டுக்கேள்வியின்றிக் கண்டபடி கைதுகள், ஆட்கடத்தல்கள், கடத்தியவர்களைப் பணயம் வைத்து அச்சுறுத்திக் கப்பம் அறவிடுதல், கடத்தப்பட்டவர்களைக் காணாமற் போகச் செய்தல், படுகொலை செய்தல், அடையாளம் காணப்பட முடியாத வகையில் சிதைந்து, எரிந்து, அழுகிய நிலையில் சடலங்கள் ஆங்காங்கே போடப்படுதல் என்று மோசமான மனித உரிமை மீறல்களும் அராஜகங்களும், மஹிந்தவின் ஆட்சியில், முன்னைய காலங்களுடன் ஒப்பிட முடியாத அளவுக்குத் தாராளமாகத் தொடர்கின்றன.

வெள்ளை வானில் வரும் மர்மக் கும்பல்கள் தங்கு தடையின்றி ஆட்களைக் கடத்திச் செல்கின்றன. அரசுப்படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பெரிய வீதிகளையே நள்ளிரவில் மூடிவிட்டு, வரிசையாக அவ்வீதியிலிருக்கும் அனைத்து வீடுகளிலும் ஆயுதம் தாங்கிய மர்மக் குழுக்கள் ஆறுதலாகத் தங்கிநின்று பொதுமக்களைத் தாக்கியும், வெட்டியும், அடித்தும், அச்சுறுத்தியும் விட்டு வீடுகளைக் கொள்ளையிட்டு, சூறையாடி, சாவகாசமாகச் செல்கின்றன. இத்தகைய கொடூர அராஜகங்களால் பீதியில் உறைந்து போயிருக்கின்றது தமிழர் தாயகம். யாழ். குடாநாட்டு மக்களின் வாழ்க்கையோ எழுத்தில் வடிக்க முடியாத அளவுக்கு அதளபாதாள சூழல் நிரந்தரமாகிவிட்ட நிலை. மொத்தத்தில் அரச பயங்கரவாதத்தின் குரூரத்தைத் தாங்கமுடியாது தமிழ் மக்கள் தவிக்கின்றனர்.

இந்தக் கொடுமைகளுக்கு முடிவு எப்போது என ஈழத்தமிழர்கள் அங்கலாய்த்து ஏங்கி நிற்க, கைதுகள், தடுத்து வைத்தல் என்பவற்றை சட்டப்படி எவ்வாறு மேற்கொள்வது என்பது பற்றிய பழைய சுற்றறிக்கையில் உள்ள விடயங்களை மீண்டும் ஞாபகப் படுத்த முற்பட்டிருக்கின்றார் பாதுகாப்புச் செயலாளர்.

'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது' என்பர். அதுபோல கைதுகள் தொடர்பான இந்த எழுத்துமூல ஏட்டுச்சுரைக்காய், ஈழத்தமிழர்களின் வாழ்வியல் அவலங்களை ஒருபோதும் நீக்கப் போவதில்லை என்பது தமிழர்களுக்கு வெள்ளிடைமலையாய் தெரிந்த விவகாரம். அதுவே அவர்களின் பட்டறிவும் கூட.

என்ன, ஏது என்று கேட்கக்கூட அனுமதியின்றி மிக மோசமான முறையில் தாக்கப்பட்டு ஆட்கள் கடத்தப்படுவதும், கைது செய்யப்படுவதும், படையினரோ அல்லது பொலிஸாரோ என்று தங்களை இனங்காட்டாமலேயே அட்டகாச நடவடிக்கைகளோடு தமிழர்களைத் தாக்கிப் பலவந்தமாக அழைத்துச் செல்வதும், வெள்ளைவான் போன்றவற்றில் வரும் மர்மக் குழுக்களால் திடீர் திடீரென ஆட்கள் கடத்தப்படுவதுமான மோசமான பிரச்சினைகளால் தமிழினம் அவலமுற -

அந்தப் பிரச்சினையை எவ்வாறு முகம் கொடுத்து சமாளிப்பது என்று தெரியாமல் அவர்கள் பீதியுற்றுத் தடுமாறியிருக்க -

ஏன் அதற்கு வழியில்லையா என்பதுபோல கைதுகளை எவ்வாறு சட்டப்படி செய்யவேண்டும் என படையினருக்கும் பொலிஸாருக்கும் அறிவுறுத்தி - நல்லுபதேசம் செய்து - பதில் தர முயல்கிறார் பாதுகாப்புச் செயலாளர்.

கைதுகள் தொடர்பாக இவ்வாறு தத்துவம் பேசுவது, 'சாப்பிடுவதற்குப் பாண் கூட இல்லை!' என்ற மக்களைப் பார்த்து, 'பாண் இல்லாவிட்டால் கேக் சாப்பிடுங்களேன்!' - என்று பதிலளித்த மன்னனின் போக்குப்போலவே உள்ளது.

ஏற்கனவே கடந்த ஆண்டு ஜூலையில் தாம் விடுத்த அந்த அறிக்கையை இப்போது மீண்டும் ஒரு தடவை பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அனுப்பிவிட்டு, அது பற்றிய தகவலை ஊடகங்களுக்கு வெளியிடும் நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்.

ஈழத் தமிழர்களுக்கு எதிரான அரசுப்படைகளின் மோசமான மனித உரிமை மீறல்கள் சர்வதேச மட்டத்தின் தீவிர கவனிப்புக்கும் ஆழ்ந்த சிரத்தைக்கும் உள்ளாகியுள்ள பின்னணியில், அதனால் எழுந்துள்ள அழுத்தங்கள், நெருக்கடிகள், இடர்கள் போன்றவற்றைச் சமாளிப்பதற்காக பழைய - இப்போது செயல்முறையில் பின்பற்றவே படாத - நடைமுறைப் படுத்தப்படாத - உளுத்துப்போன - சுற்றறிக்கையைத் தூக்கிப் பிடித்திருக்கிறார் அவர்.

ஒருவரைக் கைதுசெய்யும்போது பின்பற்றவேண்டிய ஒழுங்குகள், அவரை மனிதாபிமானத்துடன் நடத்துதல், கைது குறித்து உறவினருக்கு அல்லது நண்பருக்கு அறிவித்தல், அத்தகைய அறிவித்தலை சம்பந்தப்பட்ட நபர் வழங்குவதற்கு அவரை அனுமதித்தல், கைதுகுறித்து மனித உரிமை ஆணைக் குழுவுக்கு அறிவித்தல்..... என்று நடைமுறையில் பின்பற்றவேபடாத ஒரு 'மாயாஜாலத்தை' அவிழ்த்து விட்டு சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முயல்கிறது அரசு.

தமிழர்களை அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தி, நெரித்துத் தான் செய்யும் அட்டூழியங்களை மூடி மறைப்பதற்கு கொழும்பு அரசு வழமையாகக் கையாளும் குள்ளநரித்தன தந்திரோபாய விளையாட்டின் மற்றொரு அத்தியாயமாகவே இந்த சுற்றறிக்கையும், அது வெளியிடப்பட்டமை பற்றிய பிரசாரமும் அமைகின்றன.

# இ.தொ.கா. என்ன தும்புத்தடியா? கூட்டிவிட்டு வெளியே தூக்கி வீச!

## அமைச்சர் ஆறுமுகன் சீற்றம்



கொழும்பு, ஏப்ரல் 27

"நாங்கள் (இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியினர்) என்ன தும்புத் தடிகளா, கூட்டிவிட்டு தூக்கி எறிந்து விடுவதற்கு? நாங்கள் ஒன்றும் பிச்சை கேட்கவில்லை. எங்களது உரிமைகளைத்தான் கேட்கிறோம்."

- இவ்வாறு அரசின் மீது சீறிப் பாய்ந்திருக்கிறார் இ.தொ.கா. தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான்.

நேற்று ஜனாதிபதியின் அலரி மாளிகையில் இடம்பெற்ற பொது வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவரது இந்தச் சீற்றம் வெளிப்பட்டது.

மலையகத் தமிழ்ப் பாடசாலைகளில் முதல் முறையாக அதிக எண்ணிக்கையில், 3 ஆயிரத்து 179 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவது தொடர்பான முதல் கட்ட வைபவம் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றபோதே இ.தொ.கா. தலைவர் கோபம் கொப்புளிக்க இவ்வாறு பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப் பட்டிருந்த போதிலும், அவர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் இறுதியாட்டத்தைப் பார்ப்பதற்காகத் திடீரெனப் புறப்பட்டு விட்டதால் நேற்றைய நிகழ்வில் அவர் பங்கு பற்றவில்லை. அவருக்குப் பதிலாகப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வை எதிர்வரும் 30 ஆம் திகதி அல்லது 3 ஆம் திகதி நடத்துவதற்கே முதலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கு ஜனாதிபதியும் ஒப்புதலளித்திருந்தார்.

அவ்வாறு 30 ஆம் திகதி அல்லது 3 ஆம் திகதி இந்த நிகழ்ச்சி நடைபெறும் என்பதைக் கருத்தில் கொண்டு அமைச்சர் ஆறுமுகனும், ஏனைய இ.தொ காவின் மூத்த பிரமுகர்கள் சிலரும், இந்தியாவில் முக்கிய சில விடயங்களைக் கையாள்வதற்காக ஏற்கனவே அங்கு புறப்பட்டுச் சென்றிருந்தனர்.

முந்திய ஏற்பாட்டுக்கு மாறாக இந்த நிகழ்வை திடீரென முற்கூட்டி நடத்திக் குழப்பத்தை ஏற்படுத்தியமை, மலையக மக்கள் தொடர்பான இந்த முக்கிய நிகழ்வில் ஜனாதிபதி பங்கு கொள்ளாமல் போனமை, மேற்படி ஆசிரிய நியமனங்களை வழங்குவதில் அரசுத் தரப்பிலும் அதிகாரிகள் மட்டத்திலும் போடப்பட்ட முட்டுக்கட்டைகள், இது விவகாரத்தில் தங்களது கட்சியினர் நடத்தப்பட்ட முறைமை போன்றவை இ. தொ. கா. தலைவருக்குச் சீற்றத்தை ஏற்படுத்தின என்று உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அங்கு தமிழில் உரை நிகழ்த்துகையில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மேலும் கூறியவையாவது:-

இந்த வைபவம் காலை 9.00மணிக்கு ஆரம்பமாவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. நான் இங்கு உரிய நேரத்துக்கு வந்து பார்த்தபோது பொறுப்பானவர்கள் எவருமே வந்திருக்கவில்லை. கல்வி அமைச்சின் அதிகாரிகள் கூட வந்திருக்கவில்லை.

நான் முன்னர் ஜனாதிபதியைச் சந்தித்தபோது மே 3ஆம் திகதி இவ்வைபவத்தை வைத்துக்கொள்வோம் என்றார் அவர். எனக்கு புதுடில்லியிலிருந்துவந்த அழைப்பை அடுத்து நான் ஜனாதிபதியின் அனுமதியுடன் இந்தியா சென்றேன்.

திடீரென மலையக ஆசிரியர் நியமனம் 26 ஆம் திகதி வழங்கப்படுகிறது என எனக்குத் தகவல் தரப்பட்டது. நான் இந்திய வெளியுறவுச் செயலாளர், இந்திய சுகாதார அமைச்சர் ஆகியோருடன் முக்கிய விடயங்கள் குறித்து பேச்சு நடத்தவிருந்தேன். இந்தியாவில் 800 மலையக இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுத்தல், கொழும்பு ஜெயவர்தனபுர வைத்தியசாலைபோல ஓர் வைத்தியசாலையை நுவரெலியாவில் நிர்மாணித்தல் போன்ற விடயங்கள் குறித்து இந்தியத் தலைவர்களுடன் நடத்தவிருந்த பேச்சுகளை இரத்துச் செய்துவிட்டே இங்கு - இந் நிகழ்வுக்கு - விரைந்து வந்தேன்.

மலையக ஆசிரியர் நியமனத்துக்கு கல்வி அமைச்சின் அதிகாரிகளே முட்டுக்கட்டைபோட்டனர். ஆனால், கல்வி அமைச்சர் நியாயத்துடன் செயற்பட்டார். முட்டுக்கட்டை போட்டவர்கள் யாரென்பது எமக்குத் தெரியும். எம்மை இளக்காரமாக நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். நாம் என்ன தும்புத்தடியா கூட்டிவிட்டு வெளியே தூக்கி எறிந்துவிட?

- இவ்வாறு மேடையில் வைத்தே அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் கர்ச்சித்தார்.

(சி)

## யாழ். ரயில் நிலையப் பகுதியில் இரவில் வேட்டுச் சத்தங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ். ரயில் நிலையப் பகுதியில் நேற்றுமுன்தினம் கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தத்தால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

யாழ். ரயில் நிலையப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 9.15 மணியளவில் முதலில் ஒரு வெடிச் சத்தம் கேட்டது என்றும் அதன் பின்னர் தொடர்ந்து ஐந்து நிமிடங்கள் வரை துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இந்தத் துப்பாக்கி வேட்டுக்கள் எதற்காக தீர்க்கப்பட்டன என்பது குறித்த தகவல் எதுவும் தெரிய வரவில்லை. (அ-1-4)

## ஹார்மோனிய இசைக் கச்சேரி துர்க்கா மணிமண்டபத்தில்

யாழ்ப்பாணம், ஏப். 27

நாடக அரங்க கல்லூரியின் ஏற்பாட்டில் 'இசைபடு நினைவுகள்' என்ற தலைப்பிலான ஹார்மோனிய இசைக் கச்சேரி நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மூத்த ஹார்மோனியக் கலைஞர் பிலிப் ஜோன் கபாஸ், தவநாதன் றொபோட்டுடன் இணைந்து இந்த இசைக் கச்சேரியை நடத்துவார்.

ஆர்வலர்களைக் கலந்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (அ-1)

## புடைவை வியாபாரியை காணவில்லையாம்

இளம் குடும்பஸ்தர் ஒருவர் காணாமற் போயுள்ளார் என்று யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்லூரி வீதி, கந்தரோடை, சுன்னாகத்தைச் சேர்ந்த புடைவை வியாபாரியான தியாகராசா றஞ்சித்குமார் (வயது 28) என்பவர் கடந்த 25 ஆம் திகதி முற்பகல் 9 மணியளவில் தனது வீட்டில் இருந்து மின்விசிறி திருத்துவதற்காக சென்றதாகவும் அதன் பின்னர் அவர் காணாமற் போயுள்ளார் என்றும் அவரது மனைவி தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (அ-1-4)

## பொருள்களை வாங்க முண்டியடிக்கும் மக்கள்

யாழ். நகரப் பகுதியில் உள்ள வியாபார நிலையங்களில் நேற்று பொதுமக்கள் முண்டியடித்துக் கொண்டு அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

வடக்கில் அடுத்துவரும் தினங்களில் யுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படலாம் என்று செய்திகள் வெளியாகியதை அடுத்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற ஊகத்தில் மக்கள் அத்தியவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் திடீரென அதிகரித்தன. அத்தியவசியப் பொருள்கள் முடிவடைந்து விட்டதாக சில வியாபார நிலையங்களில் தெரிவிக்கப்பட்டது. (அ-8)

## நூல் வெளியீட்டு விழா

திருமறைக் கலாமன்றத்தைச் சேர்ந்த யோ. யோண்சன் ராஜ்குமார் எழுதிய 'கொல் ஈனுங் கொற்றம்' எனும் கூத்துருவ நாடக நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு128, டேவிற் வீதியில் அமைந்துள்ள கலைக் கோட்டத்தில் இடம்பெற உள்ளது.

திருமறைக் கலாமன்ற மூத்த கலைஞர் கலாபூஷணம் ஜீ.பீ. பேர்மினஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

நூல் மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த. கலாமணி நிகழ்த்தவுள்ளார்.

# படுவான்கரைப் பாடசாலைகளில் கணனிகள், பொருள்கள் அபகரிப்பு

கொழும்பு, ஏப்.27

மட்டக்களப்பில் படையினரின் ஷெல் தாக்குதல்கள் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்த படுவான்கரைப்பகுதிப் பாடசாலைகளில் இருந்த 100 இற்கும் மேற்பட்ட கணினிகளை படையினர் அபகரித்துள்ளனர் என்று குற்றஞ்சாட்டப் படுகின்றது.

கடந்த 50 நாள்களாகப் படையினர் அங்கு இப்பொருள்களை அபகரிப்பதில் ஈடுபட்டுள்ளனர் என்று தமக்கு தகவல் கிடைத்திருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.அரியநேத்திரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அரசு இந்தப் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கும் அதேவேளை, இந்தக்கணினிகளையும் மீளவழங்க வேண்டும் என்றும் அவர் அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:-

படுவான்கரையிலுள்ள மக்களை இடம்பெயரச் செய்துவிட்டு அங்குள்ள பாடசாலைகளில் இருந்த கணினிகளைப் படையினர் அபகரித்துச் சென்றுள்ளனர் என்று நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வெல்லாவெளி மகாவித்தியாலயம், கண்டுமணி மகாவித்தியாலயம், அம்பலாந்துறை கலைமகள் வித்தியாலயம், அரசடித்தீவு விக்னேஷ்வரர் வித்தியாலயம், முதலைக்குடா மகாவித்தியாலயம், கொக்கட்டிச்சோலை ராமகிருஷ்ணா வித்தியாலயம், கண்ணங்குட்டி மகாவித்தியாலயம், கரடியனாறு மகாவித்தியாலயம், நாவற்குடா மஞ்சிக்காடு வித்தியாலயம், நாவற்காடு நாமகள் வித்தியாலயம் உட்பட இன்னும் பல பாடசாலைகளில் இருந்த கணினிகளே இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கணினிகள் வழங்கப்பட்டு சில நாள்களிலே இடம்பெயர்வு இடம்பெற்றுவிட்டது. இதனால் இக்கணினிகளை மாணவர்களால் பார்க்க மாத்திரமே முடிந்தது. பயில முடியவில்லை.

கணினிகள் மாத்திரமின்றி பாடசாலைகளில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டிகளும் பெறுமதி வாய்ந்த பொருள்களும் திருடப்பட்டுள்ளன என்று தெரி விக்கப் படுகின்றது.

இதற்கான முழுப்பொறுப்பையும் அரசே ஏற்பதோடு உரிய மதிப்பீடு செய்து இந்தக் கணினியை மீண்டும் அப்பாடசாலைகளுக்கு வழங்க வேண்டும். - என்றார்.

(சி)

## நாளை

சித்திரை - 15
சனிக்கிழமை
28.04.2007
திதி: ஏகாதசி
முற்பகல் : 08.12
நட்சத்திரம்: பூரம்
முற்பகல் : [illegible]
சுபநேரம் : [illegible]
ராகுகாலம் : 08.58 - 10.28

## 30ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலைகளுக்கு மட்டுமே விடுமுறை

கொழும்பு, ஏப். 27

தொழிலாளர் தினமான மே தினம், இம்முறை இலங்கையில் மட்டும் ஏப்ரல் 30ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. ஏப்ரல் 30ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே. வி. பியும் கொழும்பில் மேதினத்தைக் கொண்டாட ஒழுங்குகளைச் செய்துள்ளன.

மே தினம் கொண்டாடப்படவுள்ள ஏப்ரல் 30 ஆம் திகதி பொது விடுமுறை வழங்கப்படமாட்டாது. ஆனால் பாடசாலைகளுக்கு மாத்திரம் அன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு தெரிவித்தது. தொழில் ஆணையாளரும் இதனை அறிவித்திருந்தது தெரிந்ததே.

ஸ்ரீல. சு. கட்சியின் மே தினக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு புதிய மாநகரசபை திடலில் பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகும். இம்முறை மே தின ஊர்வலம் நடைபெறமாட்டாதென மேதின ஏற்பாட்டாளரும் மேல் மாகாண ஆளுநருமான அலவி மௌலானா நேற்று 'உதயனு' க்குத் தெரிவித்தார்.

ஜே. வி. பியின் மேதினக் கூட்டம் ஏப்ரல் 30 ஆம் திகதி மாலை [illegible] துக்கு முன்னாலுள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஊர்வலம் நண்பகல் 12.00 மணிக்கு கொழும்பு மாநகரசபைக்கு முன்னால் ஆரம்பமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி இம்முறை மேதினத்தை மே முதலாம் திகதி மத அனுஷ்டானங்களுடன் கொண்டாடவுள்ளதாக ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம். பி. தெரிவித்தார்.

இதேவேளை, விக்கிரமபாகு கருணாரட்ணவின் புதிய இடது சாரி முன்னணியும் மே தினத்தை முதலாம் திகதியன்றே கொழும்பில் கொண்டாட ஏற்பாடுகளைச் செய்துளளது.

மலையக மக்கள் முன்னணியின் மேதினக் கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி தலவாக்கலையில் நடைபெறும். தலவாக்கலையில் 29ஆம் திகதி காலை 10.30 மணிக்கு மலையக மக்கள் முன்னணித் தலைவர் அமைச்சர் பெ.சந்திரசேகரன் தலைமையில் நடைபெறும்.

பெருந்தோட்டத் துறையின் முக்கிய தொழிற்சங்கங்களான இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர்சங்கம், இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன இம்முறை மே தினத்தைக் கொண்டாடவில்லை.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோத்தபாயவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோத்தபாய ராஜபக்ஷவும், பசில் ராஜ பக்ஷ வும் நாடாளுமன்றத்துக்கு வந்தால், தனது பதவியை அர்ப்பணிக்கத் தயாராக இருப்ப தாகக் கூறினார். (அ-1)

## விமானப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நள்ளிரவு விடுத்த செய்திக்குறிப் பில் தெரிவித்தது.

சந்தேகத்துக்கு இடமான விமானம் தாக்குதல் நடத்துவதைதடுக்கும் நடவடிக் கையாகவே பாதுகாப்புத் தாக்குதல்கள் முடுக்கி விடப்பட்டன.

கட்டுநாயக்கா விமானத் தளம் மீது வான் தாக்குதல் எதுவும் நடத்தப்பட வில்லை என்றும் விமானப் படைத்தளம் மிகவும் பதுகாப்பாக உள்ளதாகவும் விமா னப்படையினர் உறுதிப்படுத்தி உள்ளனர் - என்றும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது. (அ)

## நான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரவையில் பேசுகையில் அவர் இப்ப டிக் கூறினார்.

ரொக்கட் லோஞ்சர் கடத்தப்பட்டமை மற்றும் பயங்கரவாதச் செயல்கள் குறித்து காங்கிரஸ் உறுப்பினர்கள் பேரவையில் உரையாற்றினர்.

அதற்குப் பதில் அளித்துப் பேசுகை யில் அவர் இப்படிக் கூறினார்.

நான் விடுதலைப் புலிகளை ஆதரிப்ப வன் அல்லன். இதில் நான் மிகத் தீவிர மாக இருக்கிறேன். விடுதலைப் புலிக ளுக்கு தமிழகத்தில் வேலை இல்லை. பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டவர் களை விடுதலைப் புலிகள் என்று கருத முடியாது. அவர்கள் நோக்கம் வேறு, போக்கு வேறு. தமிழகத்துக்கு தீங்கு விளைவிக்க விடுதலைப் புலிகளுக்கு இந்த அரசு இடம் தராது என்பது உறுதி யாக அறுதியிட்டுக் கூறுகிறேன் - என்றார் முதல்வர் கருணாநிதி. (1)

## பொலிஸாரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரங்களைக் குறைப்பதற்கு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பொது மக்களுக்குக்காட்டவும், சர்வ தேசப் பிரதேசத்துக்கு மட்டும் உதவுமே தவிர, வேறு எந்த வகையிலும் பயன் தராது.

இந்தப் பின்னணியில் பொலிஸ் அதிகா ரங்களை இராணுவத்திற்கு வழங்கும் முடி வில் இருந்து இலங்கை அரசை விலகச் செய்வதற்கு, அதன் மீது அழுத்தம் பிரயோ சிக்குமாறு சர்வதேச சமூகத்தையும் இதில் தொடர்புள்ள ஏனைய தரப்புகளையும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு கோருகின்றது - என்று கேட்கப்பட்டுள் ளது. (அ-சி)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிலோ மீற்றர் கிழக்கே உள்ள திருவை யாறு பகுதிமீதே சுமார் பன்னிரெண்டு குண்டுகள் வரை வீசப்பட்டிருக்கின்றன. திருவையாறு பாடசாலையில் இருந்து சுமார் இருநூறு மீற்றர்கள் தொலை வில் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன என்று கூறப்படுகிறது.

69 வயதான வயோதிபர் ஒருவரும் 26 வயது இளைஞர் ஒருவரும் இத்தாக்கு தலில் காயமடைந்தனர் என்று முற் கொண்டு வெளியாகிய தகவல்கள் தெரி வித்தன.

காலை நேரம் தாக்குதல் நடத்தப்பட்ட தால் பாடசாலை செல்லத் தயாராகிக் கொண்டிருந்த மாணவர்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது. அவர்கள் வீடுகளுக்குள் தங்கினர்.

கிளிநொச்சி நகரம் மீது விமானங்கள் பறந்து சுற்றியதால் மருத்துவமனை நோயா ளர்களும் பீதி அடைந்தனர்.

கிளிநொச்சியின் கிழக்கில் விடுதலைப் புலிகளின் தலைவர்களை இலக்கு வைத்தே இந்த வான் தாக்குதல் நடத்தப்பட்டது என்று விமானப் படை தெரிவித் தது.

விமானப்படைப் பேச்சாளர் குறூப் கப்டன் அஜந்த டி சில்வா இதனை உறுதிப்படுத் தினார்.

விடுதலைப்பு லிகளின் தலைவர் கள் தங்கியிருக்கும் பகுதி மீதே தாக்கு தல் நடத்தப்பட் டது என்று அவர் கூறினார்.

இதனை மறுத் திருக்கும் விடு தலைப் புலிகளின் பேச்சாளர் இராசையா இளந்திரையன், கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக அந்தப் பகுதியில் நாங்கள் தங்கியிருக்க வில்லை - என்றார்.

குண்டு வீச்சி னால் அந்தப் பகுதி யில் வீடுகள் சேத மடைந் துள்ளன என்று அவர் கூறி னார். (சி)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன. அச்சுறுத்தல் விடுக்கப்படலாம் என்ற அபாய நிலையைக் கருத்தில் கொண்டு சர்வதேச விமான நிலையம் உட னடியாக மூடப்பட்டது. மின்சாரமும் துண் டிக்கப்பட்டது - என்று மூத்த படை அதிகாரி ஒருவர் ரொய்ட்டர் செய்தி நிறுவ னத்திற்கு கூறியிருந்தார்.

விமானப் படைத்தளம் மீது தாக்குதல் நடைபெறலாம் என்ற அச்சத்தில் வானத் தில் விமான எதிர்ப்புத் தாக்குதல் நடத்தப் பட்டன என்பதை பாதுகாப்புத் தரப்புகள் உறுதிப்படுத்தின. கட்டுநாயக்காவைச் சூழ உள்ள பிரதேசங்களைச் சேர்ந்த மக் கள் வானத்தை நோக்கி நீண்ட நேரம் எரி பந்தப் பரசூட்டுகள் ஏவப்பட்டதைத் தாம் கண்டதாகக் கூறினர்.

அங்கிருந்து எச்சரிக்கை வேட்டுக்கள், குண்டுகள் வெடித்ததைக் கேட்க முடிந்த தாகவும் அவர்கள் மேலும்தெரிவித்தனர்.

இதேவேளை-

நேற்றிரவு சுமார் 10 மணிக்கு புத்தளம் கடற்பகுதிக்கு மேலாக இரண்டு சந்தேகத் துக்கு இடமான - இனந்தெரியாத விமானங் கள் பறந்ததாகக் கிடைத்த எச்சரிக்கையாக தற்காப்பு பீரங்கி வேட்டுகளைத் தீர்த்ததாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

நேற்றிரவு 10.50 மணியளவில் மர்ம விமானம் பறக்கும் சத்தம் கேட்டதைய டுத்து விமானத் தளத்தில் இருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. ஷெல்களும் ஏவப்பட்டன.

இதனால் விமான நிலையத்துக்குச் சென்ற பயணிகளிடையேயும் பதற்றம் ஏற்பட்டது.

இடிமின்னல் சத்தத்துடன் சேர்ந்து குண்டு வெடிக்கும் சத்தங்களும் கேட்ட தாக கட்டுநாயக்காவுக்குச் சமீபமாகவுள்ள கிராம வாசிகள் தெரிவித்தனர். சுமார் 45 நிமிடங்களின் பின் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

விமான நிலையம் செல்லும் பாதை கள் உடனடியாக மூடப்பட்டிருந்த போதி லும் நேற்று நள்ளிரவு 12.30 மணி யளவில் விமானப் பறப்புக்கள் ஆரம்பமா கின. விமான சேவைகள் வழமைக்குத் திரும் பின. கடந்த மாதம் 25ஆம்திகதி நள்ளிரவு 1.20 மணிக்கு புலிகளின் இரு விமா னங்கள் கட்டுநாயக்க விமானத் தளம் மீது குண்டு களை வீசித் தாக்குதல் நடத்தி யிருந்தமை தெரிந்ததே. (அ-1)

## தற்கொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கங்களுக்குக் கருத்துத் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் விடிகாலை 'சீல்' வைக்கப்பட்ட நிலையில் பெட்டியொன் றைக் கண்ணுற்ற ஈழத்தமிழ் அகதியொரு வர் அதனைப் பிரித்துப் பார்த்தார் என்றும்-

அதற்குள் வெடி குண்டுகள் அடுக்கப் பட்டிருந்தமையைக் கண்ணுற்ற அவர் அதிர்ச்சியடைந்த நிலையில் பொலிஸாரி டம் இதுகுறித்த தகவலைத் தெரிவித்தார் என்றும் - தகவல்கள் தெரிவித்தன.

தகவலறிந்ததும் விரைந்து வந்த மாவ ட்ட பொலிஸ் எஸ்.பி.திருஞானம் தலை மையிலான பொலிஸார் பெட்டியை நவீன கருவிகள் கொண்டு சோதனை நடத்தினர்.

குறித்த குண்டுகள் தற்கொலைக் குண் டுதாரிகள் பயன்படுத்தும் ரகத்தைச் சேர்ந் தவை என்றும் -

மனித உடலில் அணியக்கூடிய வகை யில் அவை இருந்தன என்றும் - தெரிவிக் கப்பட்டது.

வெடிகுண்டுகள் என உறுதிப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து மண்டபம் கடற்க ரைப் பகுதியிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம்வரை நடமாடுவதற்கு பொதுமக்க ளுக்குத் தடை விதிக்கப்பட்டதாகவும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட் டது.

இந்திய கடற்படையினருக்கும், இரா ணுவ நுண்ணறிவுப் பிரிவினருக்கும் சம் பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

வெடி குண்டுகளைச் செயலிழக்க வைப்பதா, அல்லது அவற்றை ஆதாரமாக வைத்துக்கொண்டு விசாரணைகளைத் தொடர்வதா? என்று அதிகாரிகள் மத்தி யில் குழப்பம் நிலவியதாகப் பொலி ஸாரை மேற்கோள்காட்டித்தமிழகச் செய் திகள் குறிப்பிட்டன.

நேற்றுக் காலைவரை குண்டுகள் செய லிழக்கச் செய்யப்படவில்லை என அறிய முடிந்தது.

வெடிகுண்டு மீட்கப்பட்ட இந்தச் சம் பவத்தைத் தொடர்ந்து மண்டபம் ஈழத்த மிழர் முகாம் எங்கிலும் பதற்றம் தொற்றி யுள்ளதாகத் தெரியவந்தது.

இந்தச் சம்பவத்தால் விசாரணைகள், தேடுதல்கள் என்ற போர்வையில் கெடுபி டிகள் அதிகரிக்கலாம் என அகதிகள் தரப் பில் அச்சம் வெளியிடப்பட்டிருக்கிறது. (சி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜோன் தம்பிஜயா தனலக்சுமி

(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, மந்திகை)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் புதுத்தோட்ட வீதி, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜோன் தம்பிஜயா தனலட்சுமி 26.04.2007 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோன் தம்பிஜயாவின் அன்பு மனைவியும் தேவகி, மாலதி, சரோஜா ஆகியோரின்அன்புத் தாயும் அன்ரனிதாசன், பேரானந்தன், டொன் பொஸ்கோ ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கரவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று(27.04.2007)வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் வேரொண்டை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுத்தோட்ட வீதி,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

### கந்தையா சண்முகம்

(முன்னாள் முகாமையாளர், Adam Metels Colombo)



கந்தையா சண்முகம் 25.04.2007 அன்று லண்டனில் காலாமனார்.

அன்னார் கோப்பாய் மத்தியை சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த அமரர் செல்லையா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் தேவராசா, அழகேஸ்வரன், ருக்மணிராஜகோபால் ஆகியோரின் சகோதரரும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் துளசிதா, ரகுதாஸ், மோகன்தாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் வளவன், சுதர்மினி, எலிசபெத்லாத ஆகியோரின் பிரியமிகு மாமனும் அகல்யா, ஆதமி, ஹரிஹா, வினோஷா, ராஜீவி, ஹரிப்பிரன் ஆகியோரின் பேரனும் தினேஷ், தனுஷிதா, ரூபதாஸ், ரூபிதா, நிர்மலதா, முகுந்தாஸ், ரமணதாஸ், குணாலதாஸ் ஆகியோரின் பெரியப்பாவும் ஆனந்ததாசன், உஷாஜினி, பவனிதரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.04.2007 ஞாயிற்றுக்கிழமை City of London மயனாத்தில் முற்பகல் 11 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எஸ்.ரகுதாஸ் (மகன் -லண்டன்), எஸ்.மோகதாஸ்(மகன்-லண்டன்) 0796885867
கே.வளவன் (மருமகன் - லண்டன்) 02085517399, 07971859752
வி.ஆனந்தாசன் (சகலன் - இலங்கை) 0112324894

### திருமதி கிருஷ்ணபிள்ளை தங்கப்பொன்

அல்வாய், தவமஹாலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணபிள்ளை தங்கப்பொன் நேற்று(26.04.2007)வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளையின் (செட்டியார்) மனைவியும் காலஞ்சென்ற தவமலர், விக்கினேஸ்வரன்(லண்டன்), திருமதி வெற்றிவேல் ரதி ஆகியோரின் தாயும் லயன் ந.துரைராஜா (ஜே.பி., விவாகப்பதிவாளர், வடமராட்சி), வெற்றிவேல்(கொற்றவத்தை, அ.மி.த.க. பாடசாலை), திருமதி .வி.இந்திராணி ஆகியோரின் மாமியும் ரமேஸ்(பொறியியலாளர், கனடா), சுரேஸ்(கனடா), சதீஸ்(பொறியியலாளர், கனடா),திருமதி பத்மராஜன் மேகலா, காலஞ்சென்ற ஜமுனா, நிருத்திகா, துஷ்யந்தன், சிந்துஜன், பத்மராஜன் (ஆசிரியர்), திருமகள்(கனடா), துவாரகா (கனடா), துளசிகா(கனடா) ஆகியோரின் பேர்த்தியும் டிலானி, நிசானி, நிருசன், கீதன், ஹரிணி, ஆதித்தன் ஆகியோரின் பூட்டியும் திருமதி தம்பிஜயா பறுபதம், காலஞ்சென்ற பாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27.04.2007)வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அல்வாய் பங்குவேம்படி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
லயன் ந.துரைராஜா
(ஜே.பி., விவாகப்பதிவாளர், வடமராட்சி),

'தவமஹால்'
அல்வாய்

SUBRA(14)
சித்தன்கேணி
2009 A/L
புதியபிரிவு
அனுபவமுள்ள ஆசிரியர் குழு
ஆரம்பம் - 28.04.2007
சனி காலை 7
O/L DAY
புதிய பிரிவு
திங்கள் 30.04.2007
காலை 7 மணி

அமைதியான சூழலில்....
எடிசன் அக்கடமி
யாழ்ப்பாணம்
O/L
DAY CLASS
பிரிவு I 7.30 - 1.30
பிரிவு II 8.30 - 2.30
கணிதம்- B.P.பாஸ்கரன்
P.சிவகுமார்
விஞ்ஞானம் -

சுடர் ஒளி வார இதழ்
29.04.2007



பலாலி குண்டு வீச்சு:
இன்னுமொரு இறுதியாட்டம்
குடாநாட்டில் அரச நிறுவனங்களின்
தேவைகளை நிறைவேற்றுவதில் தாமதம்
வடக்கு மீதான தாக்குதல் அறிவிப்பும்
நோர்வே தூதரின் விஜயம் ரத்தும்
அந்தரத்தில் தொங்கும்
முஸ்லிம் காங்கிரஸ்
அமைச்சர் பதவி பெற
தமிழக காங்கிரஸுக்குள் போட்டா போட்டி
ஆழ ஊடுருவும் படையினரின்
இலக்குக்குள் அப்பாவிப் பொதுமக்கள்
தாலி கட்டத் தவிக்கும் தமிழர்கள்
யார் ஆண்மையற்ற கணவன்?
விமானக் கட்டண விலை ரூ.35/=
இன்னும் பல சுவையான ஆக்கங்களுடன்
குடாநாட்டில் இப்போது வாங்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.04.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.